Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, MAY 7, 2022

சனிக்கிழமை மே 07, 2022 | ஒளி: 07 கதிர்: 299 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

## ரஞ்சித் மீண்டும் இராஜினாமா



இரகசிய வாக்கெடுப்பின் ஊடாக, பிரதி சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்ட ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தனது பதவியை நேற்று (06) இரவு இராஜினாமா செய்துகொண்டார். ஏப்ரல் 5 அனுப்பிய இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை. சுயாதீனமாக இயங்கபோவதாக ஏப்ரல் 7 அறிவித்தார், ஏப்ரல் 30பிரதி சபாநாயகர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டது. மே. 5 நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் வெற்றியீட்டினார். எனினும், மே.6 தனது பதவியை இராஜினாமா செய்தார்.

## ஒரு நாள் கறுப்பு ஹர்த்தால்:



# நாடு அடங்கியது

- **பேரணிகளும் போராட்டங்களும் ஆதரவு கொடுத்தன**
- **பாராளுமன்ற வளாகத்தில் கண்ணீர்புகை**
- **வடக்கு, கிழக்கு ஸ்தம்பிதம்: மலையகம் முடங்கியது**
- **அத்தியாவசிய தேவைகளுக்காக வாகனங்கள் ஓடின**

மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் தாங்கிக்கொள்ள முடியாத சுமை, பொருட்களின் விலை அதிகரிப்பு, சேவைக் கட்டண அதிகரிப்பு உள்ளிட்டவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அரசாங்கத்தின் அராஜகத்தை கண்டித்தும், நேற்று (06) நாடளாவிய ரீதியில் கறுப்பு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## சபாநாயகர் வீட்டுக்காவலில்; போராடுவோர் சபைக்குள்

**எதிர்க்கட்சி எச்சரிக்கை; சபைக்குள் குழப்பம்: படைக்கலசேவிதர் இரு தடவைகள் தள்ளி வீழ்த்தப்பட்டார்**

■ பா.நிரோஸ்

பாராளுமன்ற சுற்றுவட்டாரத்தை முற்றுகையிட்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் குறித்து சபைக்குள்ளும் எதிரொலித்த நிலையில் "வெளியில் மாணவர்கள்,

தொடர்ச்சி P2

## சபாநாயகர் அலுவலகத்தை சுற்றிவளைத்த எதிர்க்கட்சியினர்

**வெளியில் நடப்பதை அவதானிக்குமாறு வலியுறுத்தினர்**

பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் கூடியிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நேற்று (06) பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து சபைக்குள்ளும் நேற்று சர்ச்சை ஏற்பட்டது.

தொடர்ச்சி P2

## எனது வீட்டை சுற்றிவளைக்க சதித்திட்டம்

**ராசமாணிக்கம் தொடர்பு என்கிறார் ரணில்**

ராஜபக்ஷர்களுக்கும் எனக்கும் இடையே எவ்விதமான தொடர்பும் கிடையாது. அவர்களுடன் தொடர்பு இருப்பதாக தகவல்களை பரப்பி, பல்வேறு குழுக்களை அனுப்பி எனது வீட்டை சுற்றிவளைக்க திட்டங்கள் வகுக்கப்படுவதாகவும், கூட்டமைப்பின் சாணக்கியன் எம்.பியும் இதற்கு காரணம் எனவும் ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஷிரந்தியை பிரதம விருந்தினராக அழைத்தமைக்கு கடும் சாடல்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் பிரதம விருந்தினராக பங்கேற்றுள்ளார்.

தொடர்ச்சி P2



## ரணிலுக்கு பாதுகாப்பு வழங்குங்கள்

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கோரிக்கை விடுத்தார். பாராளுமன்றத்தில் நேற்று (6) விசேட கூற்றொன்றை முன்வைத்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமரும் எம்.

தொடர்ச்சி P2



## "நான் தூண்டிவிடவில்லை"

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டை சுற்றிவளைக்க நான் ஆட்களை அனுப்பவில்லை. மட்டக்களப்பில் உள்ள என்னால் எவ்வாறு கொழும்பில் உள்ள அவரது வீட்டை சுற்றிவளைக்க ஆட்களை அனுப்ப முடியும் என ராசமாணிக்கம் சாணக்கியன் எம்.பி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2


## நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய அரசாங்கத்துக்கு வழங்கும் தண்டனை என்ன?

**பொய்களை கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றுகின்றனர்**

■ பா.நிரோஸ்

நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய அரசாங்கத்துக்கு கொடுக்கும் தண்டனை என்ன என்பதை நீதி அமைச்சரிடம் கேட்க விரும்புகின்றோம். மக்களின் பிரதிநிதிகளாக நாம் இந்தச் சபையை பிரதிநிதித்துவப் படுத்துகின்றோம். ஆகவே மக்களின் நிலைப்பாட்டை இங்கு கேட்பதற்கு உரிமை உண்டு. எனவே இந்த அரசாங்கத்துக்கு கொடுக்கும் தண்டனை என்ன என்பதை கேட்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2





## நல்லபாம்புடன் ஆர்ப்பாட்டம்

■ க. அகரன்

அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் இணைந்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணியை முன்னெடுத்திருந்தன.

தொடர்ச்சி P2

## 'கோட்டா கோ ஹோம்' மீதான பொலிஸாரின் கோரிக்கை பரிசீலிப்பதில் இருந்து விலகினார் மேலதிக நீதவான்

**காலிமுகத்திடலில் 'கோட்டா கோ ஹோம்' போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அந்தப் போராட்டம் தொடர்பில் கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுணாவெலவிடம் பொலிஸார் கோரிக்கையொன்றை நேற்று (06) முன்வைத்தனர்.**

தொடர்ச்சி P2



## பாலமுனை துப்பாக்கி சூட்டில் 16 பேர் காயம்

**பொலிஸ் காவலரணுக்கும் தீ**

■ பாறுக் ஷிஹான்

வீதித் தடையில் கடமையிலிருந்த பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலையடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 16 பேர் காயமடைந்துள்ளனர். அத்துடன் பொலிஸ் காவலரணும் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம், அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட பாலமுனை வைத்தியசாலைக்கு முன்பாக, வியாழக்கிழமை இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த 16 பேரும், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில்



அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தக் காவலரணில் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் பொலிஸார் கடமையிலிருந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## இழவு வீட்டில் 'அரசியல்' கைகலப்பு; இருவர் காயம்

**கைதான முக்கிய புள்ளிகளுக்குப் பிணை**

■ ஆ.ரமேஸ்.

வலப்பனை, மந்தாரம்நுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலமுள்ள தோட்டத்தில் இடம்பெற்ற கைகலப்பில் இளைஞர்கள் இருவர் காயமடைந்துள்ளனர். அந்தச் சம்பவத்தை அடுத்து, ஆளும் தரப்பு அரசியல்வாதி ஒருவரின் சகோதரர் உள்ளிட்ட, மூவர் கைது செய்யப்பட்டனர்.

சம்பவத்தை அடுத்து திரண்டு சென்ற மக்கள், அரசியல்வாதியின் சகோதரர் வீட்டையும் மற்றுமொரு வீட்டையும் சேதப்படுத்தினர். அத்துடன் வாகனமொன்றுக்கும் சேதம் விளைவித்தனர். இந்தச் சம்பவம், நேற்றுமுன்தினம் (05) இரவு இடம்பெற்றுள்ளது.

தாக்குதல்களுக்கு உள்ளான இளைஞர்கள் இருவரும் மந்தார நுவர பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விருவர் மீதும் தாக்குதல்களை மேற்கொண்ட நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.பி. ரத்நாயக்கவின் சகோதரர் கீர்த்தி குடாபண்டார ரத்நாயக்க,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நாடு அடங்கியது

இந்த ஹர்த்தாலினால் பல துறைகளும் முடங்கி, நகரங்கள் வெறிச்சோடி கிடந்தன. தனியார்துறை பொதுப் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தது. எனினும், இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்கள், ஒரு சில பயணிகளும் ஓடித்திரிந்தன.

ரயில் தண்டவாளங்கள் குளிர்ச்சியடைந்திருந்தன. எந்தவொரு ரயிலும் சேவையில் ஈடுபடவில்லை. போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்பதற்காக பலரும் சொந்த வாகனங்களில் சென்றதை அவதானிக்க முடிந்தது.

கொழும்பில், தள்ளுவண்டிகள் வீதி ஓரமாய் வரிசையில் ஒதுங்கி நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. பொதுச்சந்தைகளுக்கு பூட்டுப்போடப்பட்டிருந்தது. தனியார் துறைகளில் பல அத்தியாவசிய மற்றும் அவசியமான துறைகள் நேற்று (06) வழமைபோலவே இயங்கின.

இந்நிலையில், ஹர்த்தாலுக்கு மத்தியிலும், பல மட்டங்களைச் சார்ந்தவர்களும், ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் நாடளாவிய ரீதியில் நடத்தினர். பாராளுமன்ற வளாகத்தில், பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், நேற்றும் (06) தொடர்ந்தது.

பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தின் மீது, முதல்நாள் (05) நள்ளிரவு வேளையில்,கண்ணீர்புகைக்குண்டுத் தாக்குதல்களும் நீர்தாரை பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. எனினும், போராட்டத்தை மாணவர்கள் கைவிடவில்லை.

அந்தப் போராட்டம் நேற்றும் (06) தொடர்ந்தது. நேற்றும், கண்ணீர்புகைக் குண்டும் நீர்த்தாரை பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. இதனால், பாராளுமன்ற வளாகமே களேபர பூமியாகியது. பாராளுமன்றத்துக்கு செல்லும் சகல வழிகளையும் வழிமறித்து போராட்டம் நடத்தியமையால், பாராளுமன்றத்தில் இருந்து யாருக்கும் வெளியேற முடியவில்லை.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தியினர், போராடத்தை கடந்துசெல்ல முற்பட்டனர். இதனால், போராட்டக்காரர்களிடம் கடுமையாக திட்டு வாங்கிக்கொண்டனர். “உங்களுடைய ‘டீல்’ எல்லாம் எங்களுக்குத் தெரியும். நாங்கள் செல்லவிடமாட்டோம்” என போராட்டக்காரர்கள் கர்ஜித்தனர். வந்த இரண்டொரு எம்.பிக்களும் வந்தவழியிலேயே திரும்பிச்சென்றுவிட்டனர்.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஹர்த்தாலினால் நாடே, நேற்று (06) அதிர்ந்திருந்தது.

# சபாநாயகர் அலுவலகத்தை சுற்றிவளைத்த...

இதனை அடுத்தது கோபா வேஷத்துடன் சபாநாயகரின் அறையை நோக்கி எதிர்க்கட்சி எம்.பிக்கள் சிலர் சென்று கூச்சலிட்டனர்.

பின்னர் சபாநாயகர் அலுவலகத்திற்குள் சென்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள், சபாநாயகருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், பாராளுமன்றத்திற்கு வெளியில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போராட்டத்தையும், போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் நடத்தும் தண்ணீர் தாக்குதல் குறித்த காணொளிகள், சமூக வலைதள பதிவுகளை காண்பித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்கள்.

மீண்டும் சபை அமர்வுகள் கூடிய நிலையில் சபைக்கு வந்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன , இன்று (வெள்ளிக்கிழமை ) சபையில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் திங்கட்கிழமை கூடும் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் ஆராயப்படும். வெளியில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் எனது கவலையை தெரிவிக்கின்றேன். அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுக்குமாறு போராட்டக்காரர்களை கோருகின்றேன். பாராளுமன்றத்துக்கு வெளியே இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் முழுமையான அறிக்கையை ஒரு வாரத்தினுள் சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மாஅதிபருக்கு பணிக்கின்றேன் என்றார்.

# சபாநாயகர் வீட்டுக்காவலில் போராடுவோர் சபைக்குள்

தாக்கப்படுகின்றார்கள். எனவே உடனடியாக சபாநாயகர் சபைக்கு வர வேண்டும்” எனக் கோஷமிட்ட எதிர்க்கட்சியினர், சபாநாயகர் சபைக்குள் வராவிட்டால், அவரை வீட்டுக்காவலில் வைப்போம்.சபாநாயகரை இன்று வீட்டுக்கு அனுப்பப்போவதில்லை எனவும் போராட்டக்காரர்களை பாராளுமன்றத்து அழைத்து வரப்போவதாகவும் எச்சரித்தனர். செங்கோலை பறிக்க சபைக்குள் ஏற்பட்ட இழுபறிகளில் படைக்கல சேவிதர் நிலத்தில் இரு தடவைகள் தள்ளி வீழ்த்தப்பட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று (6) நாட்டின் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி தொடர்பான விவாதம் இடம் பெற்றுக்கொண்டிருந்தது. இவ்வேளையில் வெளியிலிருந்து சபைக்குள் ஓடிவந்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் “வெளியில் மாணவர்கள் தாக்கப்படுகின்றார்கள் எனவே உடனடியாக சபாநாயகர் சபைக்கு வர வேண்டும்” எனக் கோஷமிட்டனர்.சபாநாயகர் சபைக்குள் வராவிட்டால், அவரை வீட்டுக்காவலில் வைப்போம். சபாநாயகரை இன்று வீட்டுக்கு அனுப்பப்போவதில்லை என்று ஹரின் பெர்ணான்டோ எம்.பி சபையில் எச்சரித்தார். அத்துடன் போராட்டக்காரர்களை பாராளுமன்றத்துக்கு அழைத்து வரப்போவதாகவும் அவர் கூறினார்.

அதேநேரம் தாம் சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு திகதியை ஒதுக்குமாறும் ஐக்கிய மக்கள் சக்தியினர் இதன்போது கூச்சலிட்டனர். இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சி எம்.பிக்களான ஹரின் பெர்னாண்டோ , மனுஷ நாணயக்கார, சமிந்த விஜேஸ்ரீ ஆகியோர் கூச்சலிட்டவாறு சபைக்கு நடுவே இறங்கி செங்கோலை தூக்க முற்பட்டபோது, ஓடிவந்த படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோவும் உதவி படைக்கல சேவிதர்களும் செங்கோலை பாதுகாக்க முற்பட்டனர். இதன்போது ஏற்பட்ட இழுபறியில் படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ கீழே விழுந்து விட்டார். எனினும் மீண்டும் எழுந்த அவர் செங்கோலை பாதுகாக்க தொடர்ந்தும் முயற்சித்த நிலையில் மீண்டும் கீழே விழுந்தார். இந்த நிலைமையையடுத்து அப்போது சபைக்கு தலைமைதாங்கிக்கொண்டிருந்த எதிர்க்கட்சி எம்.பியான ஹேஷா விதானகே சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக அறிவித்தார்.

இதனையடுத்து கோபாவேஷத்துடன் சபாநாயகரின் அறையை நோக்கி எதிர்க்கட்சி எம்.பிக்கள் சிலர் சென்று கூச்சலிட்டனர். மீண்டும் 3.30 மணிக்கு கூடிய நிலையில் சபைக்கு வந்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, இன்று (வெள்ளிக்கிழமை )சபையில் நடந்த சம்பவங்கள் தொடர்பில் திங்கட்கிழமை கூடும் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் ஆராயப்படும். வெளியில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் எனது கவலையை தெரிவிப்பதாகவும், எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 10 மணிவரை ஒத்திவைக்கின்றேன் என அறிவித்து விட்டு எழுந்தார். அப்போது சபையை ஒத்திவைக்க வேண்டாமென எதிர்க்கட்சியினர் கூச்சலிட்டபோதும் அவர்கள் கருத்துகளை கூற முற் பட்டபோதும் எதனையும் காதில் வாங்கிக்கொள்ளாது சபாநாயகர் சென்றுவிட்டார்.

# எனது வீட்டை சுற்றிவளைக்க...

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ராஜபக்ஷர்களின் குழுவின் இருப்பதாக இராசமாணிக்கம் எம்.பி தவறான கருத்தை வெளியிட்டுள்ளார். நான் ராஜபக்ஷ அணியில் இருப்பதாக கூறினார். நான் ஒருபோதும் ராஜபக்ஷர்களுடன் இருந்ததில்லை. என்னைத் தோற்கடிக்க பிரபாகரனுடனேயே திட்டம் போட்டனர். இவ்விடத்தில் இராசமாணிக்கம் எம்.பி தொடர்பில் சில விடயங்களை முன்வைக்க எதிர்பார்க்கின்றேன். 2013 ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்து பட்டிருப்பு அமைப்பாளர் பதவியை பெற்றுக்கொண்டார். இதனால் ராஜபக்ஷர்களுடன் தொடர்பு கொண்டிருந்தவர் நான் இல்லை. சிலவேளை ‘மஹிந்த சரணங் கச்சாமி’, ‘பஸில் சரணங் கச்சாமி’, ‘நாமல் சரணங் கச்சாமி’ என்று கூறுவதற்கு அவருக்கு பழக்கம் இருக்கலாம். நான் அப்படி செய்யவில்லை. இவர்கள் பிள்ளையானுடன் சேர்ந்து செய்த வேலைகளையும் நான் இங்கே கூற வரவில்லை.

கடந்த பாராளுமன்ற வாரத்தில் சியம்பலப்பிட்டிய பிரதி சபாநாயகர் பதவிக்கு போட்டியிடவுள்ளதாக கூறப்பட்டது. அதன்போது நான் கூறியது என்னவென்றால் பக்கம் மாறிய பின்னர் பதவியில் இருந்து விலகியமையை ஏற்றுக்கொள்வதாகவும், அடுத்ததாக எதிர்க்கட்சியில் இருந்து செல்வது சிறந்தது என்றும் கூறினேன். நான் கூறிய பின்னர் எனது வசனத்தை மாற்ற வேண்டிய தேவை எனக்கில்லை.

எனது வீட்டை சுற்றிவளைக்குமாறு தகவல்கள் பரப்பப்படுகின்றன. சில குழுக்களை அங்கே கொண்டு வர முயற்சிக்கின்றனர். இந்த விளையாட்டுடன் இராசமாணிக்கமும் தொடர்புபட்டுள்ளார். கொலன்னாவ பக்கத்தில் இருந்து கொண்டு வரவும் முயற்சிக்கின்றனர். நான் பாராளுமன்றத்தில் கூறியதை கொண்டு அச்சுறுத்துவது தவறாகும் என்றார்.

# அரசாங்கத்திற்கு வழங்கும் தண்டனை என்ன?

பாராளுமன்றத்தில் நேற்று (6) நாட்டின் நெருக்கடி நிலைமை குறித்த விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் போராட்டங்கள் இடம்பெற்றுக்கொண்டுள்ளன. ஜனாதிபதி செயலகத்திற்கு செல்ல முடியாது. அவர் எங்குள்ளார் என்றும் தெரியவில்லை. பிரதமர் இல்லம் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தை சுற்றிவளைத்துள்ளனர். நம்பிக்கையில்லா பிரேரணைக்கு அனுமதி வழங்கவில்லை என்றால் சபாநாயகரின் இல்லமும் சுற்றிவளைக்கப்படும். எமது வீடுகளில் கூட இப்போது எம்மை தீட்டித்தீர்க்க ஆரம்பித்துள்ளனர். எனவே இதற்கு உடனடியாக தீர்வுகாண வேண்டும். அரசாங்கம் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சீனா, இந்தியாவிடம் கடன்களை பெற்றுக்கொள்ளவே இவர்கள் சர்வதேச நாணய நிதியத்தை நாடாது இருந்தனர். அவ்வாறு சீனா இந்தியாவிடம் கடன்களை பெற்றால் அந்த கடன்களை என்ன செய்தோம் என அவர்கள் தேடப்போவதில்லை. ஆனால் சர்வதேச நாணய நித்தியத்திற்கு சென்றால் அவர்களிடம் பெற்றுக்கொண்ட பணத்தில் என்ன செய்தோம் என தேடுவார்கள். அதனால் தான் இவர்கள் சர்வதேச நாணய நித்தியத்திற்கு செல்லவில்லை. இவர்களின் கொள்ளையடிக்கும் கொள்கை காரணமாகவே அவ்வாறு செயற்பட்டனர். இடைக்கால அரசாங்கத்தை உருவாக்கவோ, சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கவோ முதலில் பிரதமர் பதவி விலக வேண்டும். ஆனால் இன்றுவரை அதற்கு அவர் தயாரில்லை. இவர்கள் பொய்களை கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றிக்கொண்டுள்ளனர். சர்வதேச நாணய நிதியத்தின் பணம் வரும் வரை இவர்கள் சமாளித்துக்கொண்டிருப்பார்கள் என்றார்.

# ரணிலுக்கு பாதுகாப்பு...

பி.யுமான ரணில் விக்கிரமசிங்க தனது வீட்டை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தவேண்டும் என்று இரா.சாணக்கியன் எம்.பி.யினால் கூறப்பட்டுள்ளதாகவும் தனது வீட்டை சுற்றி வளைக்கும் திட்டம் இருப்பதாகவும் சபையில் தெரிவித்தார்.

இந்நிலையிலேயே முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன கோரிக்கை விடுத்தார்.

# ஷிரந்தியை...

இந்த வைபவத்தை பெண் வழங்கறிஞர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. அதில்,பெண்கள் பலரும் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

நீதியமைச்சர் அலி சப்ரியும் அந்த வைபவத்தில் கலந்துகொண்டிருந்தார். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சியும் பங்கேற்றிருந்தார்.

இந்த வைபவத்துக்கு ஷிரந்தி ராஜபக்ஷ அழைக்கப்பட்டமைக்கு, சமூக வலைத்தளங்களில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பெண்களை கௌரவிக்க ஷிரந்தி ராஜபக்ஷவை விட சிறந்த விருந்தினரை பெண் வழக்கறிஞர்கள் சங்கத்தால் கண்டுபிடிக்க முடியவில்லையா? பெண் வழக்கறிஞர் சங்கத்தின் உறுப்பினர்கள் மக்கள் போராட்டத்தின் இவ்வளவு தொனிக்கும் காது கேளாதவர்களா? என்றெல்லாம் கேள்விகளைத் தொடுத்துள்ளனர்.

# பரிசீலிப்பதில் இருந்து விலகினார்...

எனினும், அந்தக் கோரிக்கையை பரிசீலிப்பதில் இருந்து கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுணாவெல விலகிக்கொண்டார். பொலிஸாரின் அந்தக் கோரிக்கையில், ஜனாதிபதி செயலக முன்றலில் உள்ள தடையை அகற்றுமாறு உத்தரவிடுமாறே கோரப்பட்டிருந்தது.

முன்வைத்திருக்கும் இந்தக் கோரிக்கையை பிரதம நீதவான் முன்னிலையில் எதிர்வரும் 10 ஆம் திகதியன்று முன்வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஷிலனி பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

பொதுமக்களின் தன்னெழுச்சி போராட்டம் தொடர்பில் ஏற்கெனவே இரண்டு வழக்குகள் கொழும்பு நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி சவேந்திர விக்கிரம தெரிவித்தார்.

இந்தக் கோரிக்கையை பரிசீலிக்க நீதிமன்றம் தயாரெனில், தாம் கோரிக்கையை முன்வைப்பதாக அரச சட்டத்தரணி சவேந்திர விக்ரம நீதிமன்றத்தின் கவனத்துக்கு நேற்று (06) கொண்டுவந்தார்.

கோரிக்கையின் தன்மை தொடர்பில் திறந்த நீதிமன்றத்தில் எந்த விடயமும் முன்வைக்கப்படவில்லை.

ஆர்ப்பாட்டக்காரர்கள் சார்பில் சட்டத்தரணிகள் குழுவுடன் ஆஜரான இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், அரச சட்டத்தரணி முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

இரு தரப்பினரும் முன்வைத்த சமர்ப்பணங்களை பரிசீலித்த மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவெல, இந்தக் கோரிக்கையை பரிசீலிப்பதில் இருந்து விலகுவதாகவும், கோரிக்கை வேறு நீதவானிடம் ஒப்படைக்கப்படும் என்றார். இதனையடுத்தே, கொழும்பு மேலதிக நீதவான் ஷிலனி பெரேரா, கோரிக்கையை பிரதம நீதவான் முன்னிலையில் முன்வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# “நான் தூண்டிவிடவில்லை”

தனது வீட்டை சுற்றிவளைக்க சதிகள் இடம்பெறுவதாகவும் சாணக்கியன் எம்.பியும் இதன் பின்னணியில் உள்ளார் எனவும் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்த கருத்து தொடர்பில் தனது கருத்துகளை முன்வைக்கும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளராக நான் இருந்தேன் என்பது இரகசியம் அல்ல. கொலைகாரர்களுடன் இருந்ததற்கு நான் மன்னிப்பும் கேட்டுள்ளேன். நான் ராஜபக்ஷர்களுக்கு கும்பிடு போடுகின்றேன் என ரணில் கூறினார். அவருக்கு எதிராக விமர்சனங்களை முன்வைக்க நான் விரும்பவில்லை. ஆனால் இரண்டு கேள்விகளை அவரிடம் கேட்கிறேன். அர்ஜூன் மகேந்திரனை மத்திய வங்கியின் ஆளுநராக்கி அதன் மூலம் பாரிய மோசடிக்கு ரணில் விக்கிரமசிங்க வழிவகுத்தார். அத்துடன் அவரின் உறவினரான அலோசியஸின் மெண்டிஸ் நிறுவனத்துக்கு 3.5 பில்லியன் ரூபாய் வங்கி ஒன்றிடம் கடன் உள்ளது. இது குறித்தும் கூற முடியுமா என கேட்டுக்கொள்கிறேன். நாட்டின் இன்றைய நிலைமைக்கு ரணிலும் காரணம். அதனால் தான் அவரை மக்கள் வீட்டுக்கு அனுப்பினர். அதுமட்டுமல்ல, மட்டக்களப்பை சேர்ந்த எனக்கு, ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டை முற்றுகையிடும் வகையில் மக்களை திரட்டமுடியாது. ரணிலின் வீட்டை சுற்றிவளைக்க என்னால் மக்களை கொண்டுவர முடியும் என்றால் என்னால் என்ன செய்ய முடியாது. இதனுடன் நான் தொடர்புபடவில்லை என்றார்.

# நல்லபாம்புடன் ஆர்ப்பாட்டம்

வவுனியா புதிய பஸ் நிலையத்துக்கு முன்பாக இன்று (06) காலை 10 மணிக்கு ஆரம்பித்த பேரணி, கொரப்பத்தான் வழியூடாக சென்று கடைவீதிக்குச் சென்று, ஏ9 வீதியை அடைந்து பழைய பஸ் நிலையத்தில் ஆர்ப்பாட்டத்துடன் நிறைவடைந்திருந்தது.

குறித்த பேரணியில் ஆசிரியர், மின்சார சபை, தபால் ஊழியர், வங்கி ஊழியர் உள்ளிட்ட பல தொழிற்சங்கங்களும் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் தொழிற்சங்கங்களும் பங்கேற்றிருந்தனர். வவுனியா பல்கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை வவுனியாவில் வாழும் தெலுங்கு மொழி பேசும் சமூகத்தினர் பாம்புகள் மற்றும் குரங்குகளுடன் குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

# பாலமுனை துப்பாக்கி சூட்டில்...

அப்பகுதி வழியாக தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை தடுத்து நிறுத்தி விசாரணை நடத்தியுள்ளனர்.

இதன்போது, மோட்டார் சைக்கிள்களில் சென்றவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. பின்னர், கைகலப்பாக மாறியுள்ளது. விடயத்தை கேள்வியுற்ற பொதுமக்களும் அவ்விடத்துக்கு படையெடுத்துள்ளனர்.

நிலைமையை சமாளிப்பதற்கு பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். தப்பியோடி கீழே விழுந்தவர்கள், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர்களென 16 பேர் காயமடைந்துள்ளனர். அந்த 16 பேரில் பொலிஸாரும், ஊடகவியலாளர்களும் உள்ளடங்குகின்றனர்.

சம்பவம் தொடர்பில், கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி கமல் சில்வா உள்ளிட்ட பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்

# இழவு வீட்டில் ‘அரசியல்’ கைகலப்பு; இருவர் காயம்

ஹங்குராங்கெத்த பிரதேச சபையின் மொட்டு கட்சி உறுப்பினர் அஜித் மற்றும் பிரதேச வாசியான சிந்திக ஆகியோரே நேற்று (06) அதிகாலை 4 மணியளவில் கைது செய்யப்பட்டனர் என மந்தாரம்நுவர பொலிஸார் தெரிவித்தனர். திரண்டெழுந்த மக்கள், மந்தாரம்நுவர தியகலஹீனையிலுள்ள முன்னாள் அமைச்சர் சி.பி. ரத்நாயக்காவின் சகோதரரின் வீடு,பிரதேச சபை உறுப்பினரின் வீடு மற்றும் வாகனம் ஒன்றை தாக்கி சேதப்படுத்தியும் உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மரண வீட்டில், அரசாங்கத்துக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்திற்கு ஆதரவளித்தமை, தோட்ட, கிராம வாசிகள் வீதிக்கு இறங்கி போராடியமை தொடர்பில் பேசப்பட்ட அரசியல் பேச்சு, வாக்குவாதமாகி, அதுவே கைகலப்பாகவும் மாறிவிட்டது.

கைது செய்யப்பட்ட மூவரும் வலப்பனை நீதிமன்றத்தில், நேற்று (06) மாலை ஆஜர்படுத்தப்பட்டனர். ஒவ்வொருவரும் தலா 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பிணையிலும், ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையிலும் விடுதலை செய்த நீதவான் தேசத் விக்கிரமசிங்க, வழக்கை மே.9ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.



# உங்களுக்கே இப்படியாயின் எங்களுக்கு எப்படி?

## சிங்களவர்களே! இப்போதாவது சிந்தித்துப் பாருங்கள்

சிங்கள மக்களின் கண்முன்னே இந்த நாட்டை சிங்கள தலைவர்கள் நாசமாக்குகின்றனர் என்றால், தமிழ் சமூகத்துக்கு எவ்வாறான அசம்பாவிதங்களை செய்திருப்பார்கள் என்பதை சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். நாட்டின் அரசியல்வாதிகளின் உண்மை நிலையை அறிந்துகொள்ள சிங்கள மக்களுக்கு தற்போதுதான் சரியான சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பில் நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

சிங்கள மக்கள் இன்று அவர்களின் தலைமைத்துவத்தை நம்பத்தயாராக இல்லை. தமது தலைவர்களே இந்த நாட்டை நாசமாக்கிக்கொண்டுள்ளனர் என்பதை சிங்கள மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர். யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு



13 ஆண்டுகளில் நாளுக்கு நாள் நாடு பாதாளத்தில் வீழ்ந்துகொண்டே சென்றுள்ளது. இன்று ஒட்டுமொத்தமாக நாடு வங்குரோத்து நிலைக்கு சென்றுள்ளது. இன்று முதல் தடவையாக சிங்கள மக்களே தமது தலைவர்களிடம் கேள்வி எழுப்ப ஆரம்பித்துள்ளனர். இன்று சிங்கள மக்களிடம் நாம் கூறுவது ஒன்றுதான். உங்களின் கண்முன்னே உங்களின் தலைவர்கள் இந்த நாட்டை நாசமாக்கி உங்களை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளார்கள் என்றால், தமிழர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள். சிங்கள மக்களுக்கு தொடர்ச்சியாக பொய்களை கூறிக்கூறி, ஏமாற்றி வந்துள்ளனர். இப்போதாவது இவற்றை கேள்வி எழுப்புங்கள்.

நாங்கள் சமஷ்டியை கோரும்போது அதனை சிங்கள அரசியல்வாதிகள் பொய் பிரசாரம் மேற்கொண்டு சிங்கள மக்களை ஏமாற்றி வந்திருக்கின்றார்கள். சிங்கள மக்களுக்கு உண்மை தெரியாது. ஆனால் இன்று அந்த உண்மை அறிந்துகொள்ள சிங்கள மக்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்து வருகின்றது. எனவே தங்களது சொந்த தலைவராலே தாங்கள் ஏமாற்றப்பட்டுவதை சிங்கள மக்கள் தற்போது உணர ஆரம்பித்திருக்கின்றனர்.

ஜனாதிபதியும் அரசாங்கமும் மேற்கொண்ட ஏதேச்சாதிகாரம் காரணமாகவே நாடு இந்தநிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதனால்தான் மக்கள் ஜனாதிபதியும் அரசாங்கமும் வீட்டுக்கு செல்லவேண்டும் என கோருக்கின்றனர். மக்கள் இவ்வாறு கோரிக்கை விடுக்கும்போது அரசாங்கம் பாராளுமன்றத்தில் ஒரு நாடகத்தை அரங்கேற்றி வருகின்றது. அதாவது, அரசாங்கத்தில் இருந்த ஒரு பிரிவினர் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசாங்கத்துக்கு ஆதரவளித்துவந்த நிலையில் திடீரென எதிர்க்கட்சி பக்கம் வந்து சுயாதீனமாக செயற்படுவதாக தெரிவித்தனர். இவர்களின் இந்த செயல் ஒரு நாடாகம் என நான் ஆரம்பத்திலேயே தெரிவித்தேன் என்றார்.

# இராஜாங்க அமைச்சர் பதவியை துறந்தார்

நாட்டின் பாரிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாத நிலையில் எனது அமைச்சினால் எவ்வித பயனும் இல்லை என்பதால் கூட்டு றவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு துறை இராஜாங்க அமைச்சர் பதிவியிலிருந்து விலகுவதாக பி.வை.ஜி ரட்ணசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (6) இடம்பெற்ற நாட்டின் பொருளாதார, நிதி நெருக்கடிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதைத்தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் பாரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாத நிலையில், கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு துறை இராஜாங்க அமைச்சினால் எவ்வித பயனும் இல்லை என்று கூறி எனது இராஜாங்க அமைச்சிலிருந்து பதவி விலகும் கடிதத்தை வியாழக் கிழமை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளேன்.



எனினும் ஜனாதிபதி அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் அவரிடம் கோரிக்கை விடுத்து, இராஜினாமாக் கடிதத்தை அவரிடம் கையளித்து விட்டு வந்தேன் என்றார்.

### எங்களை விரட்டியடிக்க

# மக்கள் பாராளுமன்றத்தை சுற்றிவளைப்பது நியாயமானது

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாது பாராளுமன்றத்தில் காலத்தை வீணடித்துக்கொண்டு இருப்போமாக இருந்தால் மக்கள் எங்களை விரட்டியடிக்க பாராளுமன்றத்தை சுற்றிவளைப்பது நியாயமானதே என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (6) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். டீசல் இல்லை; வாங்குவதற்கு பணம் இல்லை; உணவு இல்லை. ஜுன் மாதமளவில் நிலைமை என்னவாகும் எனத் தெரியவில்லை. இந்தச் சபையால் அதனை தேடிக் கொடுக்க முடியாதா? பாராளுமன்றத்தை இன்று மக்கள் திருடர்களின் குகை என்றே கூறுகின்றனர். செய்ய முடியாவிட்டால் போய்விடுங்கள் என்றும் கூறுகின்றனர். நாங்கள் இந்தக் காலப்பகுதியில் வீணாக கதைத்துக்கொண்டு சேறு பூசிக்கொண்டே இருக்கின்றோம். ஒன்றுமே செய்யவில்லை. இப்படி இருக்கையில் மக்கள் எங்கள் மீது நம்பிக்கை கொள்வார்களா?

பிரச்சினைகளை தீர்க்க நாம் எதனையாவது செய்தாக வேண்டும். இங்கே வந்து சும்மா கதைத்துவிட்டு செல்வதென்றால் மக்கள் எங்களை விரட்டியடிக்க சுற்றிவளைப்பது நியாயமானது என்றே கூற வேண்டும். இந்தச் சபையில் நாங்கள் என்ன செய்யப் போகின்றோம் என்று தீர்மானிக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்தச் சபையை நிறுத்திவிட்டு வீட்டுக்குப் போவோம். இந்த நாட்டில் இருக்கும் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுப்போம் என்றார்.



# அரசாங்கத்தின் முட்டாள்தனமே முழுக்காரணமாகும்

## கோப் குழு தலைவர் சரித ஹேரத்

எமது அரசாங்கம் பலவீனமடையவும், அரசாங்கம் வீழ்ச்சியடையவும் அரசாங்கத்தின் முட்டாள்தனமே காரணம். உரிய நேரத்தில் சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டிய நேரத்தில் தாம் நினைத்தால் போல் தீர்மானம் எடுத்தாமையே நாட்டின் வீழ்ச்சிக்கு காரணமாகும் என அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் சரித ஹேரத் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (6) இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடன்களை செலுத்த மேலும் கடன்களை பெற்றுக்கொள்வது தவறான கொள்கையே.




ஆனால் கையில் இருக்கும் பணத்தில் கடன்களை செலுத்தி, பின்னர் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொடுக்காதமை மேலும் தவறானதாகும். கொள்கை ரீதியிலான பிரச்சினைகள் உள்ளன. நாட்டின் அரசியலை முழுமையாக நிராரிக்கும் நிலைமையே ஏற்பட்டுள்ளது. பாராளுமன்றம் மற்றும் நிறைவேற்று ஜனாதிபதி ஆகிய இரண்டு நிறுவனங்களும் பலவீனமாகிவிட்டன. இதனால் புதிதாக சிந்திக்கவில்லை என்பதே உண்மையாகும். இன்றைய இளம் தலைமுறையின் நிலைப்பாடும் இதுவேயாகும்.


புதிய அரசியல் கொள்கையை சிந்திக்கவில்லை என்றால் நாட்டை மீட்டெடுக்க முடியாது. காலாவதியான கொள்கையில் இனியும் எம்மால் பயணிக்க முடியாது. அரசியலில் கல்விமான்களின் பங்களிப்பு இருந்தாலும் அதனை அரசியலில் பயன்படுத்த முடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது. அனுபவம் இல்லாத அரசியல்வாதிகள், அதிகாரிகள் மூலம் நாட்டை முன்னெடுத்து சென்றமையே இதற்கு காரணமாகும் என்றார்.


# ஹர்த்தாலும் ஆர்ப்பாட்டங்களும்


அரசாங்கத்தின் செயற்பாட்டை கண்டித்து, நாடளாவிய ரீதியில் ஹர்த்தால் நேற்று (06) முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. (படங்கள்: தமிழ்மிரர் நிருபர்கள்)













பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

# ஜனாதிபதியை காப்பாற்ற சபாநாயகர் முயற்சி

ஜனாதிபதிக்கு எதிராக கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை பிற்போடுவதற்கு சபாநாயகர் முயற்சிக்கின்றார் எனத் தாம் கருதுவதாக எதிர்க்கட்சி பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (6) ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு கூறியுள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சியினரால் ஜனாதிபதிக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை பிற்போடுவதற்கு நீங்கள் (சபாநாயகர்) முயற்சிப்பதாகவே எங்களுக்கு புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. அவ்வாறு செய்ய வேண்டாம். இந்த நாட்டு மக்களின் கோரிக்கை இதுவாகவே உள்ளது. சபாநாயகரான நீங்கள் மக்கள் பிரதிநிதிகளை பாதுகாக்கவே இருக்கின்றீர்கள். நீங்கள் அரசர்களை பாதுகாப்பதற்காக இருக்கக்கூடாது. இதனால் நீங்கள் இந்த விவாதத்தை பின்னால் கொண்டு செல்ல வேண்டாம். காலிமுகத்திடலில் உங்களுக்கு வாக்களித்தவர்களே போராடுகின்றனர் என்றார்.

# சபைக்கு வரமாட்டேன் ரோஹன ஆதங்கம்

இந்தச் சபைக்குள் மக்களுக்காக தீர்மானம் எடுப்பதை நான் பார்க்கவில்லை. எனவே எனது கட்சியின் தலைவரின் அனுமதியுடன், கொண்டுவரும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு வாக்களிக்க சபைக்கு வருவேன்; தவிர வேறு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தச் சபைக்கு வரப்போவதில்லை என தீர்மானித்துள்ளேன். அதற்கு சபையின் அனுமதியை தருமாறு கேட்டுக்கொள்கிறேன் என ஐக்கிய மக்கள் சக்தியில் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (6) ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

நாளுக்கு நாள் எமது ஆசனங்கள் மாற்றப்படுகின்றன. நாளுக்கு நாள் ஆசனங்களை மாற்றினாலும் இந்த நாட்டு மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவில்லை. 'ஹொரா கோ கம' என புதிய கிராமமொன்றை உருவாக்கி மக்கள் போராட ஆரம்பித்துள்ளனர். இந்தச் சபைக்குள் கள்ளர்களுடன் இருப்பதை எண்ணி நாமும் வெட்கப்படுகின்றோம். மக்களுக்கு சந்தேகம் எழுந்துள்ள நிலையில் இந்தச் சபையை விட்டு வெளியில் நிற்பதே நல்லதென கருதுகின்றோம் என்றார்.



# மதத்துரோகி ஒருவர் பொய் சொல்லுகிறார்

தனது மதத்தை காட்டிக்கொடுத்த மதத் துரோகியொருவர் எனது தாய் தொடர்பில் பொய்களை கூறுகின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (6) எழுந்த சர்ச்சையின் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தச் சபையை தவறாக திசை திருப்பும் வகையில், 87 வயது எனது தாயைப் பற்றி பொய்களை கூறி செயற்படுகின்றனர். தனது மதத்தை காட்டிக்கொடுத்த மதத் துரோகி, எனது தாய் தொடர்பில் பொய்களை கூறுகின்றார். இவ்வாறான பொய்களை பொறுத்துக்கொண்டு உண்மைகளை வெற்றிபெறச் செய்வதற்காக 220 இலட்சம் மக்களுடன் நாங்கள் இருப்போம் என்பதனை கூறிக்கொள்கின்றோம் என்றார்.



# “நாங்கள் பழிவாங்கப்படுகிறோமா”?

## இறுதி யுத்தம் நடைபெற்ற பிரதேசம் என்பதற்காக திணிக்கப்படும் கொடுமைகள்





சுப்பிரமணியம் பாஸ்கரன்



முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகாரிகளாலும் அரசினாலும் தனித்து விடப்பட்டிருக்கின்ற பகுதியில், அன்றாடம் பருகும் குடிநீர் பெற்றுக்கொள்வது முதல் போக்குவரத்து வரை, சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக புதுமாத்தளன் பிரதேசத்தில் இருக்கின்ற 15 வரையான கிராமங்களைச் சேர்ந்த மக்களும் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பெருங்கடல் ஓரமாக அமைந்துள்ள அம்பலவன்பொக்கணை கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட 12க்கும் மேற்பட்ட கிராமங்களும் அதேபோல முள்ளிவாய்க்கால் தெற்குப் பகுதியைச் சேர்ந்த மூன்று கிராமங்களிலும் வாழ்ந்து வருகின்ற 2,000க்கும் மேற்பட்ட மக்கள், அன்றாடம் பெரும் துன்பங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

2009ஆம் ஆண்டு இதே காலப்பகுதியில், வடபகுதியில் இருந்து முழுமையாக இடம்பெயர்ந்த மக்களும் இந்தப் பிரதேசத்திலேயே தங்கியிருந்து, பெரும் துன்பங்கள், துயரங்களை அனுபவித்த ஒரு பகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அதிகவான பெருங்கடல் பகுதியை ஒரு புறமாகவும் சிறுகடல் பகுதியை மறுபுறமுமாகவும் கொண்ட ஒரு பிரதேசமாக அமைந்துள்ள அம்பலவன்பொக்கணை, புதுமாத்தளன், பழைய மாத்தளன், பேய் பாறைப்பட்டி, வலஞ்சன் கரியல், வயல் தெற்கு, பட்டிக்கரை, நெல்லி மோட்டை, காயா மோட்டை, சாலை உள்ளிட்ட 12 கிராமங்களும் அதேபோல முள்ளிவாய்க்கால் மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட சாளம்பன், வலைஞர்மடம் உள்ளிட்ட மூன்று கிராமங்களும் உள்ளடங்கலாக சுமார் 15க்கும் மேற்பட்ட கிராமங்கள் இந்தப் பிரதேசத்திலேயே அமைந்துள்ளன.

இந்த 15 கிராமங்களுக்கும் ஒரே ஒரு பிரதான போக்குவரத்து பாதையாக ஏ 35 வீதியின் இரட்டைவாய்க்கால் சந்தையிலிருந்து, சாலை வரைக்குமான சுமார் 13 கிலோ மீற்றர் வீதி காணப்படுகின்றது.

இந்தப் பாதையூடாக பயணம் செய்வது, மிகவும் கடினமானது. அதாவது எந்த விதமான புனரமைப்புகளுமின்றி, பாரிய குன்றும் குழியுமாக மழைக்காலங்களில் வெள்ளநீர் தேங்கி, போக்குவரத்து செய்ய முடியாத கைவிடப்பட்ட பாதையாகவே காட்சி தருகின்றது.

போக்குவரத்து என்பது அறவே இல்லை; இங்குள்ளவர்கள் பாடசாலைக் கல்வி உள்ளிட்ட அடிப்படை தேவை, மருத்துவ வசதி என எதற்கும் புதுக்குடியிருப்பு அல்லது முல்லைத்தீவுக்கு 12, 15 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டிய அவலம் தொடர்கின்றது. அதற்கும் போக்குவரத்து வசதிகள் இல்லை; இதைவிட எல்லாவற்றுக்கும் மேலாக குடிநீர் வசதி என்பது பெரும் பிரச்சினையாகவே இருக்கிறது.



இந்தப் பிரதேசத்தில் வாழுகின்ற மக்கள், தாங்கள் ஆரம்ப காலம் தொட்டு இன்று வரைக்கும் குடிநீருக்கான நெருக்கடியைத் தொடர்ந்து எதிர் கொண்டு வருவதாகவும் ஆனால், மீள்குடியேற்றத்தின் பின்னர் தமது பிரதேசத்துக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்வதாக பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தினாலும் இந்தத் திட்டம் எதுவும் இப்போது நடைமுறையில் இல்லை. அவை அனைத்தும் செயலிழந்து போயுள்ளன. கடற்றொழில் என்ற ஒன்றை மட்டுமே நம்பி வாழும் தங்களுக்கு இப்போது அது கூட பிரச்சினை என்று குறிப்பிட்டார்கள். அதாவது எரிபொருள் விலையேற்றம், வெளிமாவட்ட மீனவர்களின் அனுமதியற்ற மீன்பிடி, இந்திய இழுவை மடி தொழில் என எல்லாமே தங்களை கீழ் நிலைக்குத் தள்ளிவிட்டன என்கின்றார்கள்.

“செல்வச் செழிப்போடும் வசதிகளுடன் நாங்கள் வாழ்ந்து கொடிகட்டிப் பறந்தவர்கள்; இப்போது போதைப்பொருள் பாவனை, கொள்ளை என நாங்கள் விரும்பாத செயற்பாடுகள் தலைவிரித்தாடுகின்றன. இவையெல்லாம் எங்கள் மீது திட்டமிட்டு திணிக்கப்பட்டிருக்கும் என்ற கேள்வி கூட எங்களுக்கு எழுந்துள்ளது. எங்கள் கிராமங்கள் பற்றி உலக நாடுகள் கூட ஆய்வுகள் செய்தன; உலக நாடுகளிலும் பேசப்பட்டன. ஆனால் இன்று எங்களுடைய பிரதேசம் எவரது செவிகளுக்கும் கேட்காத ஒன்றாக மாறிவிட்டது. எல்லாவற்றாலும் கைவிடப்பட்ட நாங்கள், துன்பத்தை சுமக்கின்ற ஓர் அவல நிலையிலேயே வாழ்ந்தகொண்டிருக்கின்றோம்” என்று தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தினார்கள்.

இவர்களுடைய நிலையை அறிந்து, இந்தப் பிரதேசத்துக்கான பிரதான வீதியாக காணப்படுகின்ற மேற்படி 13 கிலோ மீற்றர் நீளமான வீதியைப் புனரமைத்துத் தருமாறு, 11 ஆண்டுகளாக இவர்கள் தொடர்ச்சியான கோரிக்கைகளை முன்வைத்து வருகின்ற போதும், இதுவரை ஒரு சாண் கூட புனரமைக்கபடாத நிலை காணப்படுகின்றது.

“இறுதி யுத்தம் நடைபெற்ற பிரதேசம் என்பதற்காக இவ்வாறு இழுத்தடிக்கப்பட்டு வருகின்றதா? என்ற கேள்வி கூட எங்களுக்கு இருக்கிறது. ஏனெனில், நாங்கள் அன்று இந்த பிரதேசத்தில் பெரும் மனிதப் பேரவலங்களைச் சந்தித்து, பெரும் அழிவுகளையும் சந்தித்து இருந்தோம். ஆனால் தொடர்ந்தும் அவல வாழ்க்கை வாழும் ஒரு நிலையே காணப்படுகிறது” என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.







# திருகோணமலை: பொருளாதார நெருக்கடியின் எதிரொலி









ஹஸ்பர் ஏ ஹலீம்
ahhasfar@gmail.com





இலங்கை நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி, அனைத்து மக்களையும் பெரிதும் பாதித்துள்ள நிலையில், வீதி மறியல் போராட்டங்கள், தீப்பந்தமேந்திய போராட்டம் எனப் பல போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

திருகோணமலை மாவட்டத்திலும் கூட, இந்தப் பொருளாதார நெருக்கடி காரணமாக மீனவர்கள் சமூகம், விவசாய சமூகம், சட்டத்தரணிகள் சமூகம், வைத்தியர்கள், தாதியர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூகம், அரசியல் கட்சிகள், மதத்தலைவர்கள் எனப் பலரும், அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தியுள்ளதுடன் தற்போதும் நடத்தி வருகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தமட்டில், மூவின சமூகமும் ஒன்றினைந்து வாழும் மாவட்டமாக கருதப்படுகிறது. இங்கு கரையோரத்தை பொறுத்தமட்டில் மீனவர்கள் தங்களது அன்றாட தொழில்களை செய்து வருகின்ற நிலையில் ஆழ்கடல், சிறுகடல் தொழிலாளர்கள் என காணப்பட்டாலும் கூட, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வாழ்வாதாரங்களை இழந்துள்ளனர்.

பெற்றோல், டீசல் தட்டுப்பாடு காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருந்து, பல மணி நேரத்தை வீணாக்கி எரிபொருட்களைப் பெற வேண்டியுள்ளது.

திருகோணமலை மாவட்டம் 11 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியதாகும். இருந்த போதிலும் திருகோணமலை நகர், கிண்ணியா, மூதூர் போன்ற பகுதிகளில் மாத்திரமே சதொச விற்பனை நிலையங்கள் இருந்த போதிலும், அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடும் இங்கு நிலவுகிறது. அன்றாட ஜீவனாம்சத்தை கொண்டு செல்லும் மக்கள், அதிக விலை ஏற்றம் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய விலையேற்றங்களைத் தாங்கிக் கொள்ள முடியாத மக்கள், திருகோணமலை மாவட்டத்தின் திருகோணமலை நகர், கிண்ணியா, கந்தளாய், தம்பலகாமம் உள்ளிட்ட பல பகுதிகளில் வீதி மறியல் போராட்டங்களை முன்னெடுத்ததுடன் திருகோணமலை 4ம் கட்டை சந்தியில் அண்மையில் பௌத்த துறவிகள் சத்தியாக்கிரக போராட்டத்தையும் அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுத்தனர்.

கொழும்பில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக, இன்றுடன் (07) 29 ஆவது நாளாக அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் தொடர்கின்ற நிலையில், அதற்கு வலுச் சேர்க்கும் முகமாக திருகோணமலையில் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

தினமும் ஒரு நாளைக்கு மூன்றரை மணி நேரத்துக்கும் அதிக மின் வெட்டு காரணமாகவும் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கட்டட தொழிலாளர்கள், இயந்திர தொழிலாளர்கள் எனப் பலரும், பெரும் பொருளாதார பின்னடைவுகளுக்குள் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் விவசாயம், கடற்றொழில், சிறு தோட்ட செய்கை உற்பத்தியாளர்கள் எனப் பலர் வாழ்வாதாரத்தை நடத்தி வந்தாலும் பொருளாதார சுமை காரணமாக பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பொருளாதாரம் உணவு பற்றாக்குறையை விடவும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது விவசாயி ஒருவர், தனது மன வேதனையை வெளிப்படுத்தினார்.

கணவனை இழந்த பெண்கள், தினக்கூலித் தொழிலாளர்கள் ஆகியோரின் ஜீவனோபாயம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலை, தற்போது நாளாந்தம் சடுதியாக அதிகரிக்கின்றது. பெற்றோல் ஒரு லீற்றர் 338 ரூபாயாகவும், டீசல் ஒரு லீற்றர் 289 ரூபாயாகவும், எரிவாயு 5,175 ரூபாயாகவும் (பரிந்துரை), பாண் ஒரு இறாத்தல் 140 ரூபாயாகவும் அங்கர் பால்மா 1 கிலோ 1,945 ரூபாய், சீனி 1கிலோ கிராம் 220 ரூபாய், பருப்பு ஒரு கிலோ கிராம் 510 ரூபாய் என அத்தியாவசிய பொருட்களின் விலைகள் ஏப்ரல் மாதத்தில் காணப்பட்டன.

இதனை வைத்து, அண்ணளவாக தனி நபர் ஒருவரின் ஒரு நாள் செலவை பார்ப்போமேயானால், காலை உணவு 100 ரூபாய், பால் தேநீர் 100 ரூபாய், மதிய உணவு 320 ரூபாய், தேநீர் 25 ரூபாய், இரவு நேர உணவு 300 ரூபாய்; மொத்தமாக 845 ரூபாயாகும். ஒரு குடும்பத்தில் ஐந்து உறுப்பினர்களாயின் ஒரு மாதச் செலவாக 126,750 ரூபாய் தேவைப்படுகிறது. தினக்கூலி தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவை, எவ்வாறு ஈடுசெய்வது என்ற நிலை தோன்றியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில், இறுதியாக அதிகரித்த பெற்றோல் விலையை வைத்து திருகோணமலை நகர், அபயபுர சுற்று வட்டம், சில வீதிகளை மறித்து போக்குவரத்தை தடை செய்து, டயர்களை எரித்துக் கூட இந்த அரசாங்கத்துக்கு எதிர்ப்பினை வெளிப்படுத்தினார்கள்.

இளைஞர்கள், சிவில் சமூகம் உள்ளிட்டோர்கள் இதில் கலந்து கொண்டு, கோசங்களை எழுப்பியிருந்தனர். ‘கோட்டா கோ ஹோம்’, ‘உடன் பதவி விலகி வீட்டுக்குச் செல்’, ‘அத்தியாவசிய பொருட்களின் விலை, ஆகாயத்தை தொடுகின்றது’ போன்ற பல வாசகங்களை ஏந்தி, கோசங்களை எழுப்பினர்.

இது தவிர சிவில் சமூக பெண்கள் இணைந்து, கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட நிலையில், இதனை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனால் அவர்களுக்கான கருத்துச் சுதந்திரம் கூட இந்த நாட்டில் மறுக்கப்பட்டது.

அத்தியாவசிய பொருட்கள் மட்டுமன்றி, ஏனைய பொருட்களின் விலையேற்றம் அதன் பொருளாதார நெருக்கடியின் எதிரொலி, திருகோணமலையிலும் காணக் கிடைக்கின்றது. கிழக்கிலங்கையின் முக்கியமாக பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்யும் ஒன்றாக நெற் செய்கை விவசாயம் காணப்படுகிறது. இது அரசாங்கத்தின் தற்போதைய கொள்கையால் கைவிடப்பட்டுள்ள நிலையில் நாடு திசை மாறியுள்ளது.

அரசாங்கத்தின் பிழையான கொள்கையால் விவசாயம் கைவிடப்பட்டதோடு உணவுப் பஞ்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கமானது இரசாயனப் பசளை மற்றும் நாசினிகளின் இறக்குமதியை தடைசெய்தமையால் கடந்த பெரும் போகத்தில் நெற்செய்கையும் ஏனைய பயிர்ச்செய்கைளும் முழுமையாக பாதிக்கப் பட்டன. சேதனப் பசளைகளை மாத்திரம் சிபாரிசு செய்த அரசாங்கம் விவசாயச் செய்கையில் நட்டங்கள் ஏற்பட்டால் நட்ட ஈட்டை உடனடியாக வழங்குவோம் என வாக்குறுதி அளித்திருந்தும் இதுவரை அது வழங்கப்படவில்லை. வாக்குறுதிகள் மாத்திரமே மிகுதி.

ஆகையால், பெரும்போகத்தில் ஏற்பட்ட இழப்புகளுக்கான நட்ட ஈட்டை உடனடியாக வழங்கவேண்டும். ஓர் ஏக்கருக்கு ஆகக் குறைந்தது 50 கிலோ கிராம் யூரியா பசளையேனும் பெற்றுத்தர ஆவன செய்ய வேண்டும்.

உழவு செய்வதற்கான போதிய எரிபொருளை தடையின்றி பெற்றுத்தரல், அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற சேதனப் பசளையை உழவு செய்யும் முன் கிடைக்கச் செய்ய வேண்டும். விவசாய செய்கைக்கான அனைத்து மூலப் பொருட்களுக்கும் கட்டுப் பாட்டு விலையை உறுதிப்படுத்தல் ஆகிய கோரிக்கைகளையும் முன்வைத்து, இவை நிறைவேற்றப்பட்டாலே அன்றி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டோம் என விவசாயிகள் நிபந்தனைகளையும் பல்வேறு போராட்டங்களின் போதும் விதித்திருக்கின்றனர். இதனை அரசாங்கம் கண்டு கொள்ளவில்லை.


திருகோணமலை மாவட்டத்தின் முக்கிய கந்தளாய் குள நீர்ப்பாசனத்தில் செய்கை பண்ணப் படும் 22,000 ஏக்கர் உட்பட பல மாவட்டங்களில் செய்கை பண்ணப் படுகின்ற வயல்களை கைவிடுகின்ற போது, உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதுடன் எதிர்வரும் பெரும் போக நெற் செய்கைக்கான விதை நெல்லும் இல்லாமல் போகும் அபாய நிலையும் உள்ளது.

மக்களுடைய கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்காது போனால் இளைஞர்களின் போராட்டமும் தொடர்ந்த வண்ணமே இருக்கும் . கோட்டாவின் அரசாங்கம் பிரதமர், அமைச்சரவை உள்ளிட்ட அனைவரும் பதவி விலக வேண்டும் என்பதே மக்களுடைய இந்த ஆர்ப்பாட்டத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது.

நாடு வங்குரோத்து நிலைக்கு செல்ல தற்போதைய ஊழல் மிக்க ஆட்சியே காரணம் எனவும் ‘ஹோட்டா ஹோ கோம்’ என்ற வாசகம் இலங்கையை மட்டுமல்ல கடல் கடந்த நாடுகளிலும் ஒலிக்கிறது. சமூகமாக பொருளாதார நெருக்கடிக்கான தீர்வினை திருகோணமலை மாவட்ட மக்கள் மாத்திரமல்ல, ஏனைய சமூகங்களும் எதிர்பார்க்கின்றன.

ஒரு ஜனநாயக நாட்டை பொறுத்தமட்டில், வீதியில் இறங்கி போராடத் தூண்டாத பொருளாதார கொள்கைகளை அரசு வகுக்க வேண்டும். எதிர்வரும் காலங்களிலும் பாரிய உணவுத் தட்டுப்பாடு ஏற்படலாம் என பொருளியல் நிபுணர்கள் கருத்துகளை முன்வைத்துள்ளார்கள்.

எனவேதான் யார் ஆட்சிக்கு மாறி மாறி வந்தாலும் மக்களுடைய பொருளாதார நிலைமைகளை நாசமடையச் செய்யாமல், வீதிக்கு இறங்கி போராடத் தேவையில்லாத பொருளாதார கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே மக்களின் நீண்ட எதிர்பார்ப்பாகும்.







# கிழக்கின் சுற்றுலாத்துறையும் இன்றைய நிலையும்



அ. அச்சுதன்




கடந்த இரண்டு வருடங்களாக உலகை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த கொரோனா வைரஸ் தொற்று பரவலால், இலங்கையின் சுற்றுலாத்துறையும் பாரிய அளவில் பாதிக்கப்பட்டது. இந்தச் சூழலில், இலங்கை மிக அதிகளவு அடிவாங்கிய, மிக முக்கிய துறையாக சுற்றுலாத்துறை காணப்பட்டது.

கடந்த இரண்டு வருடங்களாக, ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகம் வீழ்ச்சியடைந்தன. விசேடமாக உலக நாடுகளின் சுற்றுலாத்துறையும் இதனால் பாரிய பாதிப்பை சந்தித்தது.

சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டதன் காரணமாக நாட்டுக்குள் வருகின்ற சுமார் 05 மில்லியன் டொலர் அந்நிய செலாவணியை நமது நாடு இழந்தது. அந்நிய செலாவணி வருகை மிகவும் குறைந்து வருவதன் காரணமாக, டொலருக்கான இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்து செல்கின்றது .


தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி, விலை வாசி அதிகரிப்பு, எரிபொருள் - சமையல் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஆகிய பிரச்சினைகள் காரணமாக, பொருளாதார நெருக்கடிகளும் அரசியல் ஸ்திரமற்ற நிலைமைகளும் நாட்டின் ஒட்டு மொத்த பிரஜைகளையும் வீதிக்கு கொண்டுவந்து விட்டுள்ளன.

இந்நிலையில் நாட்டின் பணவீக்கம் மார்ச் மாத நிறைவில் 20 சதவீதத்தைக் கடந்தாகி விட்டது. அதேநேரம், ஜனவரி முதல் தற்போது வரையிலான காலப்பகுதியில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நூற்றுக்கு 60 சதவீதம் முதல் 140 சதவீதம் வரையில் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் குறிப்பிடுகின்றன.

பொதுமக்களின் அன்றாட வாழ்வியலோடு தாக்கம் செலுத்தும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பானது, மீண்டும் சுற்றுலாத்துறையிலும் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

உலக சுற்றுலா நிறுவனத்தால் அடையாளம் காணப் பட்ட உலகில் உள்ள 302 பிரதேசங்களில், இலங்கையின் சில இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன அதில் கண்டி, நுவரெலியா, கொழும்பு, காலி, களுத்துறை, பொலன்னறுவை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், திருகோணமலை , மட்டக்களப்பு, அம்பாறை உட்பட நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் 101 சிறந்த சுற்றுலாத்தலங்கள் காணப்படுகின்றன.

இத்தளங்களைப் பார்வையிடுவதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்இருந்து பல்லாயிரக்காணக்கானோர் கடந்த காலங்களில் வந்திருந்தாலும் தற்போது கொரோனாவுக்கு பின்னர், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியும் பொருட்களின் விலை உயர்வும் என்றும் இல்லாதவாறு சுற்றுலாப்பயணிகள் வருகையிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பல சுற்றுலாத்தளங்கள்







சோபை இழந்திருக்கின்றன. அத்துடன் சுற்றுலாத்துறை சார்ந்த தொழில் புரிவோரின் வருமானமும் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வரலாற்றுச் சிறப்பு மிக்க பிரசித்தி பெற்ற சுற்றுலாத்தளங்கள் காணப்படுகின்றன. திருகோணமலை மாவட்டத்தின் கோணமலையின் எழிலுக்கு ஏற்றந்தரும் பெரிய கடற்கரை, கோணேசர் கோட்டை (பிரடரிக் கோட்டை), கன்னியாவின் வெந்நீர்க் கிணறுகள், கோணேசர் மலையிலுள்ள இராவணன் வெட்டு, திருகோணமலை கடற்பரப்பில் டொல்பின் மீன்கள் துள்ளி விளையாடும் காட்சிகள் , நிலாவெளியிலுள்ள கடற்கரை-தென்னஞ் சோலைகள், குச்சவெளியின் கடற்கரை, புறாமலைத் தீவு, பைரேற் குகை, கொக்கிளாய் பறவைகள் சரணாலயம், சம்பூர் வெளிச்ச வீடு, இலங்கைதுறை போன்ற பிரதேசங்களும் மட்டக்களப்பில் பாசிக்குடா, அம்பாறையில் பொத்துவில், உல்லை, அறுகம்பை ஆகிய இடங்கள் பிரசித்தி பெற்ற இடங்களாகக் காணப்படுகின்ற போதிலும் இன்னும் பல பகுதிகள் சுற்றுலாத்தளங்களாக காணப்படுகின்றன.

உலகிலேயே சிறப்பு மிக்க இயற்கைத் துறைமுகத்தைக் கொண்ட திருகோணமலை முதல் மட்டக்களப்பு, அம்பாறை வரையான கிழக்கின் கரையோரப் பிரதேசங்களிலும் கரையோரம் சாராத பல பிரதேசங்களிலும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய பல சுற்றுலாத்தளங்கள் காணப்படுகின்றன. இருப்பினும் இத்தளங்கள், சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்குபடாமல் காணப்படுகின்றன.

இச் சுற்றுலாத்தளங்கள் அபிவிருத்தி செய்யப்படாமலும் குறித்த பகுதிகளுக்கு முறையான போக்குவரத்து வசதிகள் உருவாக்கப்படாமலும் காணப்படுவதால் இத்தளங்களை நோக்கிய சுற்றுலாப் பயணிகளின் வருகை, வளர்ச்சியடைந்ததாகக் காணப்படவில்லை.

எதிர்காலத்தில் இப்பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு போக்குவரத்து வசதிகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுமானால் பிரதேச இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பைப் பெறவும் பிரதேச பொருளாதார அபிவிருத்திக்கும் வழிவகுக்கும். கிழக்கில் வருமானம் ஈட்டித்தரக் கூடிய துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசம் மற்றும் கரையோரம் சாரா பிரதேசங்களில் சுற்றுலாத்துறைக்கான சிறந்த அழகிய தளங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக மூதூர், வெருகல், கிண்ணியா, பகுதிகளில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள் இருக்கின்றன. அவை உரியவாறு கண்டுகொள்ளப்படவில்லை.

பல்வேறு வளங்கள் இப்பிரதேசத்தில் காணப்பட்டும் அவற்றை உரிய துறைகளினூடாக பயன்படுத்தாமல் புதிய சிந்தனைகளுக்கு இடம் கொடுக்காமல், மாற்றங்களால் மாற்றத்தை ஏற்படுத்தாமல் இன்னும் இருப்பது கவலையை ஏற்படுத்துகின்றது. இம்மாவட்டத்தில் அடிக்கடி ஏற்படும் கடலரிப்பால் கரையோரப் பிரதேசங்களின் சுற்றுலாத்துறை மாத்திரமின்றி கரையோரப் பிரதேச மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுவதைக் காணமுடிகின்றது.

எனவே, இச்சந்தர்ப்பத்தில் கிழக்கின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கும் அதன் மூலம் வருமானம் குறைந்த குடும்பங்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்வதற்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கும் உரிய தரப்பினர் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.



# தமிழர்களின் அருகிவரும் கலைகளுக்கு புத்துயிர்



வ. சக்திவேல்
shagthivel@gmail.com



ஆதிகாலம் தொடக்கம் தற்காலம் வரைக்கும் தமிழர்கள் பேணிவந்த கலைச் செல்வங்களை, அடுத்த சந்ததியினருக்கும் எடுத்துச் செல்லும் மிகபெரிய கைங்கரியம், கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள திருக்கோவில், விநாயகபுரம் எனும் இடத்தில் இடம்பெற்று வருகின்றது.

“தமிழர்கள் மத்தியில் இருந்துதான் கலைகள் உருவாகியிருக்கின்றன. தமிழர்கள் ஏனையோருக்கும் அக்காலத்திலிருந்து கலைகளைப் பயிற்றுவித்து இருக்கின்றார்கள். பின்னர் கலைகள் உலகெங்கும் வியாபித்திருக்கின்றன.

“மாறாக, தமிழர்களிடத்தில் உருவான கலைகள் தற்காலத்தில் அவை தமிழர்களிடத்தில் மருவிச் சென்று, ஏனையோர் அதனைக் கைக்கொண்டு வருகின்றார்கள். இந்த நிலைமை இனிமேலும், எமது அடுத்துவரும் சந்ததியினருக்கு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் நான் எனது சுய முயற்சியினால் எமது பகுதியிலுள்ள இளைஞர் யுவதிகளையும், இன்னும் பல சமூக ஆர்வலர்களையும் ஒன்றிணைத்து ‘தமிழ் அறிவர்கள் சங்கம்’ எனும் அமைப்பை நிறுவி, அனூடாக முற்றுமுழுதாக இலவசமாக எமது இளைஞர் யுவதிகளுக்கு கலைகளைப் போதித்தும் பயிற்றுவித்தும் வருகின்றேன்” என்கிறார் தமிழ் அறிவர்கள் சங்கத்தின் தலைவர் கலைஞர் கு.குமாரதாசன்.

அவர் தனது கலைப் பயணம் குறித்து மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: “சிறுவயதிலிருந்தே எனக்கு கலைகள் மீது அதீதவிருப்பம். அதங்கிணங்க கடந்த 2004, 2005, 2007, ஆகிய ஆண்டுகளில் இந்து சேவா சங்கத்தின் ஊடகா இந்தியா சென்று முறையாக தமிழர்களின் தற்காப்புக் கலை, யோகக்கலை, சிலம்பம், தற்காப்பு அடிமுறை ஆகிய கலைகளைப் பயின்றுள்ளேன். பின்னர், இலங்கையின் நாலா பாகங்களுக்கும் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் சென்று, எனக்குத் தெரிந்த கலைகளை அறநெறி மாணவர்களுக்கும் அதன் ஆசிரியர்களுக்கும் பொது அமைப்புகளுக்கும் பயிற்றுவித்து வந்தேன்.

“அது, 2012இற்குப் பின்னர் விடுபட்டுள்ளது. ஆனாலும் நான் தொடர்ந்து அதனை மேற்கொண்டு வந்தாலும், 2018ஆம் ஆண்டிலிருந்து கிழக்கு மாகாணத்தில் இக்கலைகளைப் பயிற்றுவித்து வருகின்றேன்.

“சுமார் 1,000க்கும் மேற்பட்டவர்களுக்கு இவ்வாறு யோகா, கராத்தே, சிலம்பம், தற்காப்பு அடிமுறை ஆகியவற்றைப் பயிற்றுவித்துள்ளேன். தற்போது 10பேரை பயிற்றுவிப்பாளர்களாகச் செயற்படுவதற்குரிய பயிற்சிகளையும் வழங்கியுள்ளேன்.

“இத்துறைசார்ந்து சுமார் 30வருடகால அனுபவம் எனக்குள்ளது. எனினும் எமது சமூகத்தினர் இக்கலைகளைப் பயில்வதற்கு முன்வருவதானது மிகக் குறைவாகவுள்ளது. மறுபுறம், கலைகள் நோய் தீர்க்கும் ஒரு நிவாரணியாகும். வெளிநாடுகளின் இக்கலைகளை சிகிச்சை முறையாகக் கைக்கொண்டு, பெரியளவு நிதி செலவு செய்து கற்று வருகின்றார்கள். ஆனால், இது எமது சமூகத்துக்குத் தெரிந்தும் ஏனோ தானோ என்றிருக்கின்றார்கள்.

“தமிழர்களிடமிருந்து பிறந்ததுதான் தற்காப்பு அடிமுறையாகும். அதனை சிங்கள மக்கள் தமிழர்களிடமிருந்து கற்று, தற்போது கண்டி, கதிர்காமம் உள்ளிட்ட பகுதிகளில் தூர்ந்து போகாமல் தற்போதும் கைக்கொண்டு வருகின்றார்கள். இதனை எமது வளர்ந்து வரும் சமூகம் உணரவேண்டும்.

இலவசமாக இக்கலைகளைப் பயிற்றுவித்து வரும் இந்நிலைமையிலும், சமூகமும் இதற்கு உந்துசக்தியளிக்க வேண்டும். இவைகளை அடுத்த தலமுறையினருக்கு எடுத்தியம்புவதற்காக வேண்டி எம்மத்தியில் காணப்படும் பொது அமைப்புகள், கோவில் நிர்வாகங்கள் உள்ளிட்ட அனைவரும் முன்வரவேண்டும்.

வெறுமனே வானுயர்ந்த கட்டடங்களைக் கட்டுவதிலும், நிதி பலத்துடனும் இருந்தாலும், அவைகளை முறையாகவும், பிறருக்குப் பயன்படும் வகையிலும் நடைமுறைப்படுத்தி, தூர்ந்தபோயுள்ள தமிழர்களின் கலைகளை எமது பகுதியிலிருந்து தமிழர் தேசம் எங்கும் வியாபிக்கச் செய்வதற்கு அனைவரும் முன்வரவேண்டும். இவை வாழ்க்கைக்குத் தேவையான கலைகளாகும். இக்கலைகளை முறையாகப் பயின்றால் ஏனையவர்களைவிட உயர்வாக வரலாம் என தெரிவிக்கின்றார் தமிழ் அறிவர்கள் சங்கத்தின் தலைவர் கலைஞர் கு.குமாரதாசன்.

## கலைகளின் ஆற்றுகையும் இந்திர விழாவும்

இது இவ்வாறு, இருக்க தமிழ் அறிவர்கள் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்திரவிழா, திருக்கோவில், விநாயகபுரத்தில் கு.குமாரதாசன் தலைமையில் நடைபெற்றிருந்தது.



கு.குமாரதாசனால் அப்பகுதியிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு, பயிற்றுவிக்கப்பட்டுவரும் யோகக்கலை, தற்காப்புக்கலை, சிலம்பம் ஆகிய கலைகள் ஆற்றுகைப்படுத்தப்பட்டதுடன், அக்கலைகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு அதிகாரிகள், புடைசூழ ‘இந்திரன் விருது’ வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, யோகக்கலை, தற்காப்புக்கலை, சிலம்பம் ஆகிய கலைகளைப் பயின்ற மாணவர்களும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இங்கு, அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகஸ்தர் கு. ஜெயராஜ் கருத்தரையாற்றுகையில் தெரிவித்ததாவது: “கிழக்கு மாகாணத்தில் முதன்முறையாக, தனி ஒருவராக இருந்து, எதுவித எதிர்பார்ப்புகளும் இன்றி, தமிழர்களிடமிருந்து அருகி வருகின்ற கலைகளுக்கு, கு.குமாரதாசன் புத்துயிரூட்டி வருவதென்பதை வெறுமனே சாதாரண நன்றி கூறினால்போதாதுள்ளது.

“குமாரதாசனை நான் சிறு வயதிலிருந்தே அறிவேன். அவர் சமூகம், கலை, சமயம், உள்ளிட்ட பல விடயங்களில் அதீத அக்கறை கொண்டவர். இவர் இதுவரையில் எதுவித சலிப்புமடையாமல், செயற்படுவதென்பது எமது கிழக்கு மாகாணத்துக்குக் கிடைத்த ஒரு பொக்கிசமாகும். இது அனைவராலும் செய்யமுடியாத ஒரு கைங்கரியமாகும். அதற்காக நாம் பக்கபலமாக இருந்து, பரிபூரண ஒத்துழைப்புகளை வழங்குவோம்” என்றார்.

தற்கால நவீன கணினி யுகத்தில் அனைவரும் துரிதமாகச் செயற்பட்டு வருகின்ற போதிலும், பல விடயங்களை அவ்வப்போது கைக்கொள்ளவும், நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவும் தவறுகின்றோம். இதனால் பல தொற்றா நோய்களும் மனிதனைச் சூழ்ந்து கொள்கின்றன.

தமிழர்களின் வாழ்வியல் தத்துவங்களோடும் இயற்கையோடும் கலை கலாசாரங்களோடும் பின்னிப்பிணைந்தாக அமைகின்றன. இவைகள் மெல்ல மெல்ல கைநழுவிச் செல்ல முற்படும்போது, மணிதர்களுக்கும் கலைகளுக்குமான இடைவெளி பெரிதாகி, நோய்களுடனான இடைவெளி சிறிதாகின்றது.

தமிழர்களின் கராத்தே, யோகா, சிலம்பம், தற்காப்பு அடிமுறை உள்ளிட்ட தமிழர்களின் அருகிவரும் கலைகளை தினமும் பழக்கத்துக்குக் கொண்டுவரும் பட்டசத்தில், அது வீண்செலவீனங்களைக் குறைத்து, உடல் உள ஆரோக்கியத்தையும் நல்கும்.

எனவே, இவ்வாறு மங்கிச் செல்லும் கலைகளுக்குப் புத்துயிரூட்டிவரும் தமிழ் அறிவர்கள் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு பலரும் ஒத்துழைப்பு வழங்கி, தமிழர்கள் எங்கெங்கல்லாம் வியாபித்து இருக்கின்றார்களோ அங்கெல்லாம் இதனை முன்கொண்டு செல்ல அனைவரும் முன்வரவேண்டும் என்பதவே தமிழ் அறிவர்கள் சங்கத்தினரதும் எதிர்பார்ப்பாகும்.

# இரகசிய வாக்கெடுப்பில் நிர்வாணமாக்கப்பட்ட ‘சுயாதீனம்’

பாராளுமன்றத்தில் இருதரப்பிலும் இருப்பவர்களில் ஒருசிலரைத் தவிர, பெரும்பாலானோர் கலப்படமாகவே இருந்திருப்பர்; இன்னும் சிலர், பெரிய கட்சிகளிலிருந்து பிரிந்து சென்று, புதிய கட்சிகளை அல்லது கூட்டணிகளை உருவாக்கி, புது இலட்சனையின் கீழ் ஓரணியில் திரண்டிருப்பர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிப்போரில் பெரும்பாலானவர்கள், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள். ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிப்பவர்கள் பலர், ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்தவர்கள். தேசிய சுதந்திர முன்னணியில் இருப்பவர்கள் ஜே.வி.பியில் இருந்தவர்கள். இவ்வாறு, வகுத்துக்கொண்டே போகலாம்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல், பொருளாதார நெருக்கடியால், அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்புகளும் பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் நாளுக்கு நாள் வலுவடைந்து, நேற்று (06) ஹர்த்தாலாக விஸ்வரூபம் எடுத்திருந்தது.

பிரச்சினையைத் தீர்ப்பதில், அரசாங்கம் காண்பிக்கும் ஆமை வேகத்தை பார்க்குமிடத்து, ஹர்த்தால் நீடிக்குமென்ற அச்சம் தோன்றியுள்ளது. அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாயின், மக்கள் இன்னும் பாதிக்கப்படுவர். பொருளாதாரம் அவர்களை வாட்டிவதைத்துவிடும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், பற்றாக்குறை, பட்டினி, வாழமுடியாத நிலைமை என்பன ஏற்பட்டுள்ளதை அடுத்து, தன்னெழுச்சிப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, ஹர்த்தால் வரைக்கும் சென்றுள்ளது. கொழும்பு காலிமுகத்திடலில் போராட்டம் தொடர்கிறது. பாராளுமன்ற வளாகத்திலும் இரவிரவாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள், நாளுக்கு நாள் வலுவடைவதை அவதானித்த ஆளும் தரப்பினரும் பங்காளிக் கட்சிகளும், தாங்கள் சுயாதீனமாக இயங்கப்போகிறோமென அறிவித்துவிட்டு, எதிரணியில் வந்து தனித்தனி குழுக்களாக அமர்ந்துகொண்டனர். எனினும், அந்தக் குழுக்களில் இருந்தவர்கள், அரசாங்கத்தின் விசுவாசிகள் என்பதை, இரகசிய வாக்கெடுப்பின் போது நிரூபித்து காண்பித்துவிட்டனர்.

அரசாங்கத்தில் இருந்து விலகிச்சென்று, மக்கள் பக்கம்தான் தாங்கள் இருக்கின்றோமென படம்காண்பிப்பதற்கு முயற்சித்த சுயாதீன உறுப்பினர்கள், தங்களுடைய உண்மையான முகத்தை காண்பித்துவிட்டனர். இரகசிய வாக்கெடுப்பின் ஊடாக, ‘சுயாதீனம்’ நிர்வாணமாக்கப்பட்டுவிட்டது. இவ்வாறானவர்கள், எந்த முகத்தை வைத்துக்கொண்டு மக்கள் முன்னிலையில் நிற்கப்போகின்றனர் என்பதற்கெல்லாம் எதிர்காலமே பதிலளிக்கும்.

அரசாங்கத்திலிருந்து விலகி, சுயாதீனமாக இயங்குவதாக அறிவித்துவிட்டு, எதிரணியில் அமர்ந்துகொண்டு, அரசாங்கத்துக்கே ஆதரவாக கையை உயர்த்துவதை, ‘கேடுகெட்ட துரோகத்தனம்’ எனக் கூறுவதை விடவும் வேறு வார்த்தைகள் இருக்கவே முடியாது. அரசியலில் எல்லாப் பக்கங்களிலும் ஒரு ‘டீல்’ இருக்கிறது என்பது மட்டுமே உண்மையாகும்.

முகமூடிகள் களையப்பட்டுவிட்டன. ஆனால், மக்களின் பிரச்சினைகளுக்குத்தான் தீர்வு கிடைக்கவில்லை. மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுக்க, அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள், இன்னும் பல் பரிமாணங்களில் விஸ்வரூபம் எடுக்கும் என்பதே எமது கணிப்பாகும்.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

# வெள்ளிக்கிழமை ஹர்த்தாலின் வெற்றி

**லக்ஸ்மன்**

கடுமையான பொது எதிர்ப்பாக இருக்கின்ற ஹர்த்தால், அஹிம்சைப் போராட்டங்களின் இறுதி வடிவமாகவே இருக்கின்றது. இதனைவிடவும் தமது எதிர்ப்பை வேறு எப்படிக் காண்பிப்பது என்றால் அதற்குப் பதில் கிடைக்காது. ஆனால், வன்முறை அதற்கு அடுத்த வடிவம்தான். இவ்வகையான வேலைநிறுத்தம் பங்காளதேசம், பாகிஸ்த்தான், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பரவலாக கடைபிடிக்கப்பட்டுவரும் போராட்ட உத்திகளில் ஒன்று என்ற வகையில், நமது நாட்டில் கடந்த சில வாரங்களாக அடிக்கடி உச்சரிக்கப்படும் சொல்லாக மாறியிருக்கிறது.

இலங்கையில் இனப்பிரச்சினை காரணமாக ஏற்பட்ட ஆயுத யுத்தம் நடைபெற்ற காலங்களில் விடுதலைப்புலிகளால் ஹர்த்தால் அடிக்கடி அறிவிக்கப்படுவது வழமை. அவ்வேளைகளில் கடைப்பிடிக்கப்பட்ட ஹர்த்தாலுக்கும் இப்போதையதற்கும் நிறைய வித்தியாசம் இருந்தது.

அன்றைய காலங்களில் கடுமையான அழுத்தமுடைய அச்சத்துடனேயே நடைபெற்றிருந்தது. இப்போதைய ஹர்த்தால் தமது தேவைகளை நிவர்த்தி செய்து கொண்டே பொது மக்கள் ஆதரவு கொடுத்தார்கள். அதுவும் அவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள்; நமக்கில்லை என்பது போலவே அமைந்திருக்கிறது.

நாட்டில் இருக்கின்ற நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான முயற்சியாக தொழிற்சங்கங்களால் நேற்றைய தினம் (மே 06) சுகாதாரம், போக்குவரத்து, ரயில், மின்சாரம், கல்வி ஆகிய துறைகள் உட்பட 2,000க்கும் மேற்பட்ட குழுக்கள் அடங்கிய சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் இணைந்து ஒரு பொது அடைப்பு என்கிற ஹர்த்தாலை நடத்தின.

அரசு, அரசினுடைய இயந்திரத்தினை இயக்க முயன்றிருந்தாலும் அது தோற்றே போனது என்பது போராட்டக்காரர்களுடைய கருத்து. அவ்வாறு பார்த்தால் ஹர்த்தால் வெற்றிதான். ஆனால் அதன் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை என்றே சொல்ல வேண்டும்.

நாட்டின் தலைவரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கம் பதவி விலகவேண்டும் என்பதுதான் நேற்று நடைபெற்ற ஹர்த்தாலின் கோரிக்கை. இருந்தாலும் அக்கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால், எதிர்வரும் 11ஆம் திகதி முதல் தொடர் ஹர்த்தாலை முன்னெடுக்கவுள்ளதாக தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மையம் எச்சரிக்கையும் விடுத்திருக்கிறது.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தாலுக்கு ஆதரவாக விவசாயிகள், வர்த்தகர்கள் முதல், சாதாரண தொழிலாளர்கள் வரையில் தங்களுடைய ஒத்துழைப்பினை வழங்கியிருந்தனர்.

பல தொழிற்சங்கங்கள் இணைந்து நாடு தழுவிய ரீதியில் முன்னெடுத்த ஹர்த்தால் பயனற்றதாக இருந்தது என்று சொல்லிக் கொள்ள முடியாவிட்டாலும் இதற்கு ஒத்துழைப்பினை வழங்கியவர்களுக்கு நன்றிகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இது போன்ற ஒத்துழைப்பே கோரிக்கைகள், நோக்கங்களை வெற்றியடையச் செய்யும் என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

நேற்றைய தினம் நடைபெற்ற ஹர்த்தாலானது 1953ஆம் ஆண்டில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட முழு ஹர்த்தாலுக்குப் பின்னர், இவ்வாறானதொரு ஹர்த்தால் அனுஸ்டிக்கப்பட்டுள்ளதாகவே கருத்துகள் பகரப்படுகின்றன.

அன்றைய ஹர்த்தால் காரணமாக, அப்போதைய பிரதமர் டட்லி சேனநாயக்க பதவி விலகியிருந்தார். 69 ஆண்டுகளுக்கு பின்னர் இம்முறைதான் முழுஅளவில் நடைபெற்ற ஹர்த்தால், அரசாங்கம் பதவி விலகுவதற்கான வழியை ஏற்படுத்துமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தற்போதைய அரசாங்கத்தை அதிகாரத்திலிருந்து வெளியேறுமாறு வலியுறுத்தி, காலி முகத்திடலில் நடந்து கொண்டிருக்கும் போராட்டம் தொடர்ந்தவண்ணமிருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற பிரதேச ரீதியான, நாடு தழுவிய ரீதியிலான போராட்டங்கள் அரசாங்கத்தினைச் சிறிதும் அசைத்ததாகத் தெரியவில்லை. அது அனைவருக்கும் வெளிப்படையாகத் தெரிகின்ற, அதே நேரத்தில் எல்லோரும் முணுமுணுத்துக்கொள்கின்றதாகவும் இருக்கிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி மாத்திரமே, இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான காரணமாகக் கொள்ளாவிட்டாலும், நாட்டில் பல தசாப்தங்களாக தொடர்ந்த யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவந்த ராஜபக்ஷ பரம்பரையினர், சிங்களப் பெரும்பான்மை மக்களால் போற்றப்படுகின்றவர்களாகவே இருக்கின்றனர்; இருப்பர்.

ஆனால், இதில் மாற்றத்தை இன்றைய நிலைமை கொண்டுவந்திருக்கிறது. அரசாங்கத்தைப் பதவி விலகும்படி ஆளும் தரப்பினர் தவிர்ந்த அனைத்துக் கட்சிகளும் கடந்த வருடத்திருந்து பல தடவைகள் கருத்துகளை முன்வைத்திருந்தாலும் அது நடைபெறவில்லை.

ஆளும் தரப்பிற்கு எதிரான ஒரு பலமான எதிர்க்கட்சி இல்லாத நாட்டில், இது எப்படி சாத்தியம் என்பது இதில் கேள்வியாக இருக்கிறது.

எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின்மை இத்தச் சாத்தியத்தை நிறைவேற்றவில்லை. இரு தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் நடைபெற்ற பிரதி சபாநாயகருக்குரிய தேர்வில், பதவி துறந்தவரே மீண்டும் தெரிவு செய்யப்பட்டமை அரசாங்கத்தின் இருப்புக்கு ஆபத்தில்லை என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறது.

நாட்டில் இப்போதிருக்கின்ற நெருக்கடிகளுக்கு ஆரம்பமாக, நாட்டின் உள்நாட்டு உற்பத்தி இன்மை பார்க்கப்படுவதேயில்லை.

உள்நாட்டு உற்பத்தியில்லாத நாட்டைக் கட்டிக்கொண்டு, ஆடம்பரமாக ஆட்சி செய்வதற்கு விருப்பங்கொள்ளும் அதிகாரங்கள், எதற்காக இவ்வளவும் செய்கின்றன என்பது புரியாத புதிரே.

பல தசாப்தங்களாக நாட்டில் நடைபெற்ற யுத்தச் செலவைப்பற்றிச் சற்றும் சிந்திக்காத மனோநிலையில் இருக்கின்ற நாம் அனைவரும், அடுத்து வரும் அரசாங்கம் எதனைக் கொண்டு ஆளும் என்பதனையும் சிந்திப்பதே இல்லை.

வெளிநாடுகளையும் சர்வதேச நாணய நிதியத்தையும் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி போன்றவற்றையும் நம்பி ஆட்சி செய்யப்படுகின்ற நிலைமையில் கொடுக்கப்படுகின்ற அழுத்தங்கள், எதனைச் சாதிக்கப்போகின்றன என்பது வரலாறே முடிவு செய்ய வேண்டும்.

அரசாங்கத்துக்கு எதிராக நாடு முழுவதும் மக்கள் தன்னெழுச்சியாக ஆர்ப்பாட்டங்களையும் தொடர் போராட்டங்களையும் முன்னெடுத்து, நாட்டின் இள ரத்தங்கள் தமது எதிர்ப்பைக் காட்டி வருகின்றன.

எனினும் ஜனாதிபதியும் அரசாங்கமும் மக்களின் கோரிக்கைக்குச் செவி சாய்க்காமல் எதேச்சதிகாரமாக ஆட்சி புரிந்துவருகின்றது. மக்களின் கோரிக்கைக்கு மதிப்பளிக்காமல் தன்னிச்சையாகச் செயற்பட்டு வருகின்றனர் என்பதே பொதுவான கருத்து.

காலிமுகப் போராட்டத்துக்கு அடுத்ததாக, ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எதிராகக் கடந்த ஏப்ரல் 28ஆம் திகதி அரச, தனியார் மற்றும் பெருந்தோட்டத்துறை ஊழியர்களின் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இணைந்து நாடளாவிய ரீதியில் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். அது பயனற்றே போயிருந்தது. அதுவும் ஹர்த்தால் என்றே சொல்லப்பட்டிருந்தது.

இந்நிலையில் அதன் தொடர்ச்சியாக நேற்று நாடளாவிய ரீதியில் பூரண ஹர்த்தாலை முன்னெடுக்கப்பட்டது. சுகாதாரம், போக்குவரத்து, ரயில்வே, மின்சாரம், கல்வி உட்பட்ட அனைத்துத் துறைகளும் ஸ்தம்பித்திருந்தன.

இந்த ஸ்தப்பிதம் மக்களின் மனங்களில் மேலும் ஒரு படி மேலே சென்று அரசுக்கு எதிரான உணர்வுகளை மாத்திரம் தூண்டியிருக்கும்; தூண்டியிருக்கிறது. மக்களின் மனோநிலை மாற்றமே இதனை வெளிப்படுத்தியுமிருக்கிறது.

நடைபெற்ற ஹர்த்தாலுக்கு அரச, அரச மற்றும் அனைத்து தொழிற்சங்கங்களும் ஆதரவை வழங்க முடிவு செய்தமையே அரசுக்கு பாரியதோர் அடியாகவே அமைந்திருக்கிறது.

நாட்டின் கட்டமைப்புகளே சரிகின்ற நிலைமை உருவாகிவிட்டபோதும் மக்களின் வாக்குகளால் பாராளுமன்ற உறுப்பினர்களானவர்கள் மக்களின் குரலாக இல்லாமல் இருப்பது அவர்களின் அரசியலை கேள்விக்குட்படுத்தியிருக்கிறது.

மக்களின் குரலை ஒலிப்பதற்காக தெரிவானவர்கள், எவ்வாறு இப்படி இருக்க முடியும் என்பது இந்த இடத்தில் கேள்வியாகின்றது.

இந்தியா பெருமளவில் இலங்கைக்கு நிதி உதவிகளைக் கொடுத்தவண்ணமிருக்கிறது. எரிபொருளை வழங்குகிறது. சர்வதேச நாணய நிதியத்துக்கு பரிந்துரை செய்கிறது. அத்தோடு, அருகிலுள்ள தமிழ் நாடு அரசு அத்தியாவசியப் பொருட்களையும், நிதியையும் வழங்குகிறது.

இவையெல்லாம் அண்டைநாடு என்பதற்காக நடைபெறுகின்ற மனிதாபிமான உதவிகளாகவே கொள்ளப்படலாம். ஆனால், நடைபெறுகின்ற அத்தனைக்கும் மேலாக இலங்கையைக் கண்டாலே ஓடி ஒளிகின்ற உலக நாடுகளும் இருக்கின்றன.

மனித உரிமைப் பிரச்சினைகள், மனித உரிமை நெருக்குதல் பட்டியல்களை அடுக்கி வைத்திருக்கின்ற இலங்கை, அதன் மக்களின் குரலுக்கு செவிசாய்க்காதிருப்பதானது அரசாங்கத்தின் பொறுப்பற்ற தன்மையையே காண்பித்து நிற்கின்றது.

யாரைக் குற்றம் சொல்வது என்றே தெரியாதளவிற்கு நடைபெறுகின்ற அத்தனையும் பொறுப்பை உணர்த்தினாலும் விளலுக்கு இறைத்ததாக மாறுவது பெரும் பாதகமே.

எது எவ்வாறானாலும் மக்களின் குரலை, கோரிக்கையை, ஏக்கத்தை தட்டிக்கழிப்பது நாட்டிற்குச் சாதகமான முடிவாக இருக்கப்போவதில்லை என்பது மாத்திரமே ஜதார்த்தம்.

ஹர்த்தால் வெற்றி பெற்றதா, தோற்றுப் போனதா என்பதற்கப்பால், வரலாறுகள் கற்றுத் தந்த பாடங்களை கணக்கிலெடுக்காத யாரும் எதிர்காலத்திலோ தற்காலத்திலோ பதிலைச் சொல்லியாக வேண்டும் என்பது மறக்கப்படும் போது, வரலாறு அதன் பதிலைச் சொல்லும் என்பது மட்டுமே உறுதி.



## வாழ்வியல் தரிசனம்

ஞானத்தைத் தேடுபவர்களில் பலர் ஆசைகளைப் பெருக்கியபடியேதான் இருக்கின்றார்கள். ஞானம் என்பது கடைச்சரக்கு அல்ல; அறிவுக்கும் மேலான மெய் அறிவு.

சாதாரணமான விடயமாக ஆன்ம ஞானத்தை நினைத்தலாகாது. பூரணத்துவமானவர்கள் மௌனமானவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், அதிகம் பேசி மக்களைக் குழப்பும் ‘சுவாமி’கள் என்று தங்களைத் தாங்களே முத்திரை குத்திக் கொள்பவர்கள் அதிகமாகி விட்டார்கள்.

எதையும் எதிர்பாராத, சுயநலன் எதுவும் அற்ற, ஆசைகளோடு இணையாத, தூயநெஞ்சு உடைய மனிதனே, ஆன்மிகம் பற்றிப் பேசுவதற்கு உரிமை உள்ளவனாவான்.

செல்வம், புகழ், அதிகாரம் உள்ளவர்கள் பின்னால் செல்பவர்கள், ஆன்ம அறிவைப் பெறுவது எப்படி?

சகல கல்வியறிவையும் மக்கள் தேடிப் பெற வேண்டும். கல்வி ஒருவருக்கு அவசியமானது. பெற்ற கல்வியைப் புனிதமாகக் கொண்டு இயங்க வேண்டும்.

எளியோருக்கு இரங்குதல், வசதியற்றவர்களுக்கு இலவச கல்வியூட்டல், பொதுநல சேவை எல்லாமே தர்மத்துடன் இணைந்தவை. ஆன்ம எழுச்சியை உருவாக்குக!

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### துறைநீலாவணை கிராமம்: குழாய்நீர் கசிவுகளை சீர்செய்யுமாறு கோரிக்கை

துறைநீலாவணை கிராமத்துக்கான குழாய்நீர் விநியோகத்தில், குழாய்களில் கசிவுகள் காணப்படுவதாக துறைநீலாவணை கிராமமக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு உரித்தான, குழாய்நீர் விநியோகத்தில் காணப்படும் கசிவுகளால் குடிநீர், வீதிகளில் தேங்கி நிற்பதால் பொதுமக்களுக்கு அசௌரியமும் சுகாதார ரீதியான பிரச்சினைகளும் ஏற்படுத்துகின்றன. பொதுமக்கள் குடிப்பதற்கு பயன்படுத்தும் குடிநீர், வீதிகளில் கசிந்து வடிந்தோடுவதுடன் அவ்விடத்தில் கால்நடைகளும் குடிநீரைப் பயன்படுத்துகின்றன.

துறைநீலாவணை கிராமத்தில் சுமார் 3,500 குடும்பங்கள் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையில் இணைப்பு பெற்றவர்கள், துறைநீலாவணை மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை வீதி, மாரியம்மன் கோவில் வீதி, மகாவித்தியாலய வீதிகளில் நீர்கசிவுகள் ஏற்பட்டுள்ளது.

இவ்விடயமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர், பொறியியலாளர், கல்லாறு நிலையப் பொறுப்பதிகாரிகள் கவனம் செலுத்தி, துறைநீலாவணை கிராமத்தில் உள்ள நீர்க்கசிவுகளை சீர்செய்துதர வேண்டுமென துறைநீலாவணை கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

க. விஜயரெத்தினம்



# ‘ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாள்கள்’

காரைதீவு நிருபர் சகா

தன்னைப் பெற்ற தாயின் 75 ஆவது பிறந்த நாளில், தனது கன்னி இலக்கிய நூலை வெளியிட்டுள்ளார் கவிஞரும் மருத்துவருமான இரா. முரளீஸ்வரன். தாயார் திருமதி பாலநாகம்மா இராசரெத்தினத்தின் 75 ஆவது பிறந்த நாளில், தனது ‘ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாள்கள்’ என்ற தலைப்பிலான கவிதை நூலை வெளியீடு கௌரவப்படுத்தியுள்ளமை சிறப்பாகும்.

இவ்வாறு, தனது கன்னி இலக்கிய நூலை வெளியிட்டு வைத்த வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன், தனது முதலாவது நூலை அனைவருக்கும் அன்பளிப்பாக வழங்கிவைத்தார்.


டொக்டர் இரா. முரளீஸ்வரன்

ஆம்! கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் எழுதிய கன்னி இலக்கிய படைப்பான ‘ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாள்கள்’ என்ற கவிதை நூல் வெளியீடு சனிக்கிழமை (30) மட்டக்களப்பு பிள்ளையாரடி தமிழ்ச் சங்க கலையரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு தமிழ்ச் சங்க தலைவர் சைவப்புரவலர் வி. ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு முன்னிலை அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் செ. யோகராசா கலந்து சிறப்பித்தார்.

முதன்மை அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க. கருணாகரன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்திய கலாநிதி வே. விவேகானந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

முன்னதாக பவளவிழாக் கண்ட நூலாசிரியரின் தாயாகிய திருமதி பாலநாகம்மா இராசரெத்தினத்தின் 75ஆவது பிறந்த தினத்தை தமிழ் சங்கத்தினர் மேடையில் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

நூலாசிரியர் அறிமுக உரையை தேசபந்து மு. செல்வராசா நிகழ்த்த நூல் வெளியீட்டு உரையை தேசமான்ய விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா நிகழ்த்தினார்.

நயவுரையை அருட்தந்தை அ.அ. நவரெத்தினம் நிகழ்த்த வாழ்த்துரைகளை டொக்டர்களான புஷ்பலதா லோகநாதன், பா. யூடி ரமேஷ் ஜெயகுமார் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

மேலும் இந்நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி.க. கலாரஞ்சனி, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி குண. சுகுணன் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நூலின் முதல்பிரதியை மட்டக்களப்பு தமிழ்ச் சங்க பொருளாளர் தேசபந்து மு. செல்வராசா பெற்றுக்கொண்டார்.

கதிரவன் த. இன்பராசாவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் உள்நாட்டு இறைவரித்திணைக்கள சிரேஷ்ட ஆணையாளர் சட்டத்தரணி மு. கணேசராசாவால் வரவேற்புரையும் கலைக்கோகிலம் நாட்டியப்பள்ளி மாணவிகளின் வரவேற்பு நடனமும் நடைபெற்றது.

உரைகளை தொடர்ந்து ஏற்புரையை நூலாசிரியர் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் முரளீஸ்வரன் நிகழ்த்த நன்றி உரையை துணை செயலாளர் திருமதி பிரியா கருணாகரன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் நூல் இலவசமாக வழங்கப்பட்டது. அழைப்பிதழில், ‘ வாழ்த்துகள் மட்டுமே அன்பளிப்பாக ஏற்றுக் கொள்ளப்படும்’ என்று குறிப்பிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

வைத்தியகலாநிதி இரா. முரளீஸ்வரன் ஒரு சிறந்த மருத்துவ நிர்வாகி மட்டுமல்லாமல், ஓர் உன்னத இலக்கியப் படைப்பாளியுமாவார். 1976இல் யாழ்ப்பாணம் நெல்லியடியில் பிறந்து, 1985ஆம் ஆண்டுகளின் பின்னர் மட்டக்களப்பில் வாழ்ந்துவரும் இவர், தனது கல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் மருத்துவ பட்டப்படிப்பை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் மருத்துவ நிர்வாக முதுமாணியை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மருத்துவராக 2005ஆம் ஆண்டிலிருந்து கடமையை தொடங்கி, 2013ஆம் ஆண்டு கல்முனை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகராகி தற்போதுவரை அங்கு தொடர்ந்து பணிபுரிகின்றார். மருத்துவ அனுபவங்களும் கவிதை அனுபவமும் இணைந்த மருத்துவமனை நாள்களைப் பற்றிய கவிதைகள் சேர்ந்த கவிதைத் தொகுப்பாக இந்நூல் வெளியிடப்பட்டது.


















ஏ.எச்.ஏ. ஹுஸைன்
husseinmedia000@gmail.com

# இருண்ட யுகத்தில் இனங்கள் சிதறுண்டு விடக்கூடாது



இன்று நமது நாடு, போராட்டங்களால் நிறைந்துள்ளது. அழிவுகரமான சுய நலன்கள், ஆதிக்கம் செலுத்துகின்றன. அதிக பதற்றத்தால் மக்கள் உடைந்து போயுள்ளனர்.

அப்பாவி மக்களின் இரத்தம் நீதிக்காக அழுகிறது. நம் நாட்டில் அநீதியும் ஊழலும் அதிகம். இன்று மக்கள் அச்சத்துடனும் கவலையுடனும் வாழ்கின்றனர். ஒடுக்குமுறையினதும் சுரண்டலினதும் அனைத்து வடிவங்களும் ஆதிக்கம், பாகுபாடு என்பவற்றின் வெளிப்பாடாகும்.

நம் நாட்டில், நல்ல அமைப்பு உள்ளது. அதேவேளை நாட்டின் நலனை மனதில் கொள்ளாத, திறமையற்ற ஊழல்வாதிகளைக் கொண்ட தலைமைத்துவப் பேரழிவுகளும் நமது நாட்டில்தான் உள்ளன.

மிக அதிகமாக இனக்கலவரங்களைக் கண்ட எமது நாட்டில், தற்போது இனங்களை இணைப்பதற்கான காலம் கனிந்திருக்கிறது. இதை எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை. அதிலும் எதிர்காலத் தலைவர்களான இளைய சமுதாயத்தினர் தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற பேதமில்லாமல் சமகாலப் போராட்டத்தில் இணைந்திருக்கிறார்கள் என்பது, இன்னொருபடி மேலே சென்று நிம்மதிப் பெருமூச்சு விட வைக்கிறது.

எந்த ஒரு சிறுபான்மை சமூகத்திலும், பலமான அரசியல் சக்திகள் இருக்கக் கூடாது எனப் பெரும்பான்மை ஆளும் தரப்பு விரும்புவது இயல்பானதுதான். இக் கீழ்த்தரமான செயற்பாடுகள், காலங்காலமாக இலங்கையில் நடந்தேறியும் வந்திருக்கின்றன.

நாடு பிடித்தவர்களான ஐரோப்பியர், இலங்கையை கையகப்படுத்தி ஆண்டபொழுது, இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சி வழிமுறையைத்தான் கையாண்டார்கள். அதன் எச்ச சொச்சங்கள்தான் இன்றளவும் இனவாதமாக உருவெடுத்து, நீறு பூத்த நெருப்பாக நீடிக்கின்றது.

தமிழ், முஸ்லிம் சமூகத்தில் உருவாகும் பலமான அரசியல் சக்திகளை உடைப்பதில், உள்ளூர் பேரினவாதிகளும் சர்வதேச வல்லாதிக்க சக்திகளும் வெற்றிகண்டிருக்கின்றன. காலங்காலமாக சிறுபான்மையினரின் தரப்பில் பலவீனங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. தற்பொழுதும் அது நடந்துகொண்டுதான் இருக்கின்றது.

அதேவேளை, பேரினவாத மற்றும் சர்வதேச சக்திகளின் பிரித்தாளும் சூழ்ச்சிகளுக்கு, சிறுபான்மை இனத்தவர்கள் துணைபோவதும் நீடித்து வந்திருக்கின்றது.

மனிதர்களை மனிதர்களாக மதிப்பளித்து, ஒரே குடையின் கீழ் இணைப்பதற்கான பல்வேறு மனிதாபிமானச் சட்டங்களும் நியதிகளும் அடிப்படை உரிமைகளும் உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. இருந்தாலும் இன்னமும் அவை சரிவரக் கடைப்பிடிக்கப்படுவதற்கு மனிதரின் இழி குணங்கள் இடம்கொடுக்காததால், இங்கே குழப்பங்கள் குறைந்தபாடில்லை.

இனக்கலவரம் ஒரு சமூகத்தின் பாரிய அழிவுக்கும் மீளமுடியாத பின்னடைவுக்கும் காரணமாய் அமைந்துவிடுகிறது. அவற்றால் சிறுபான்மையினரே மிகவும் பாதிப்புறுகிறார்கள்.

இலங்கை மிக அதிகமாக இனக்கலவரங்களைக் கண்ட நாடு. பரஸ்பரம் பௌத்தர்களும் தமிழர்களும் முஸ்லிம்களும் அவ்வப்போது மோதவைக்கப்படுகிறார்கள்.

சிறுபான்மையாக வாழும்போது இனக்கலவரங்களைத் தவிர்த்துக் கொள்வது எவ்வாறு என்பதுவே, எல்லா இன மக்களும் பயில வேண்டிய அடிப்படைக் கலையாகும்.

குறிப்பாக புவியியல், மொழி, தொழில், பூர்வீகம், பண்பாடு போன்றவை அடிப்படையில் கிட்டத்தட்ட ஒன்றாக உள்ள அம்சங்களோடு வாழும் சமூகங்கள், இந்த இணக்கப்பாட்டுடன் வாழும் கலையை கற்றுக் கொள்ள வேண்டும். தேர்தல் காலங்களில் சிறுபான்மையிடம் இருக்கும் ஒரே பொருள் வாக்கு வங்கி மட்டுமே. அதுவும் இப்போது கடுமையாகச் சிதறடிக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் முதலில் முஸ்லிம், தமிழர் என்ற இரு சிறுபான்மை இனங்களும் ஒன்றிணைய முடியுமானால் அது ஒரு மாபெரும் சக்தி. துரதிர்ஷ்டவசமாக சுதந்திரம் கிடைத்த நாளிலிருந்து இன்றுவரை, இந்த இரு சிறுபான்மைச் சமூகங்களாலும் ஒன்றிணைய முடியவில்லை.

ஆனால், இணைவதற்கான பல காரணிகள் இருந்தன. அவர்களது இணைப்பு இந்த நாட்டைப் பலப்படுத்தி, இனவாதிகளை தலைகுனியச் செய்யும். அதையும் தாண்டி, இன்னும் ஒருபடி மேலே சென்று மிகவும் தூரநோக்கத்துடன் பயன்படுத்தினால் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களின் இணைவு என்பது, இந்த நாட்டையே கட்டியெழுப்ப பெரிதும் பயன்படும்.

இந்த உண்மைபற்றி தமிழ், முஸ்லிம், சிங்களத் தலைமைகள், புத்திஜீவிகள் சிந்திக்கமாட்டார்களா என்பது சமூக ஐக்கியத்தையும் அழிவின் கொடூரத்தையும் அறிந்த சிந்தனையாளர்கள் எழுப்பும் கேள்வியாகும்.

பாரிய பின்னடைவுகளுக்கு முகம்கொடுத்திருக்கும் இலங்கையில் சிறுபான்மையினங்கள், போர் ஓய்ந்ததன் பின்னர், சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் தங்களுக்குள் பிளவுபட்டு நின்றது, இன்னுமின்னும் இந்தச் சமூகங்களை அதலபாதாளத்தை நோக்கிச் செல்லத் தோதாய் அமைந்து விட்டிருந்தது.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், அரசியல் ரீதியாக கட்சிகள் பிளவுபட்டு, பெரும்பான்மைக் கட்சிகளிலும் சிதறுண்டு நிற்கும் நிலை ஒருபக்கம்; இன்னொரு பக்கத்தில் அகதிகளாக வாழும் ஒரு தொகையினரின் துயரங்கள்; மற்றொரு புறத்தில், வடக்கிலும் கிழக்கிலும் தம் சொந்த நிலங்களை, வீடுகளை, சொத்துகளை இழந்து நிற்கும் கையறு நிலை.

இதேபோன்று, தமிழர் தரப்பு அரசியலிலும் பல பின்னடைவுகள்; பிளவுகள். உரிமைப் போராட்டத்தின் விளைவாக, தமிழர் தரப்பு இழந்ததும் ஏராளம். உயிர், உடமை, பூர்வீகம், தனித்துவம் எல்லாமும் இழக்கப்பட்டிருக்கின்றன.

போரால் இழந்தவை ஒரு சிறுபகுதிதான்; ஆனால், சிறுபான்மையினர் ஒற்றுமையின்றிப் பிளவுபட்டு நின்று, தமது பலவீனத்தால் இழந்தவைகள்தான் ஏராளம். அவை ஈடு செய்ய முடியாதவை. யுத்தத்தால் ஏற்பட்ட பௌதீகப் பாதிப்புகளோடு சிறுபான்மை மக்களிடத்தில் அரசியல் ரீதியில் படுமோசமான தேக்க நிலையும் ஏற்பட்டுள்ளது.

இப்போது நாம் எழுப்ப வேண்டிய கேள்வி இதுதான். சரியாகத்தான் நாம் எமது நோயைப் பரிசோதித்துள்ளோமா அல்லது, அதில் தவறு விட்டுள்ளோமா? நோயாளி குணமடையக்கூடிய வாய்ப்புகள், வழிகள் தெரிகிறதா? அல்லது சிறுபான்மைச் சமூகங்களின் நிலை இப்படியேதான் கழிய வேண்டுமா?

சமூகப் பிரச்சினைகளுக்கு தமிழ், முஸ்லிம் சிறுபான்மைச் சமூகங்கள் ஒற்றுமைப்படாதவரை, பேச்சுவார்த்தைகளும் போராட்டங்களும் பெரும்பாலும் ஏமாற்றத்திலேயே முடியும். தமிழர் தலைமைகள் நாங்கள் மாத்திரம்தான் என்று ஒருபுறமும் முஸ்லிம் தலைமைகள் நாங்கள் மாத்திரம்தான் என்று இன்னொரு புறமும் மலையகத் தலைவர்கள் நாங்களே என்று மறுபுறமும் மார்தட்டிக் கொள்வதால், ஆன பயன் ஏதுமில்லை. இது சிறுபான்மையினர் பிளவுபட்டு நிற்பதையும் அந்தத் தலைமைகள் மீது மக்களுக்கு முற்றாக நம்பிக்கை இழக்க வைத்து விடுவதையும் பிரதிபலிக்கும்.

எனவேதான் இந்த விடயத்தில், சமூகங்களின் புத்திஜீவிகள், கல்விமான்கள் என அனைவரும் இணைந்து ஒரு மேசைக்கு வந்து, உள்ளகப் பிரச்சினைகளை மனம் விட்டுப் பேசி உடன்பாட்டுக்கு வரவேண்டும்.

அரசியல் தீர்வு விடயத்தில், எந்தத் தளம்பலும் அற்ற உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருக்க வேண்டும். மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஆதரவுத் தளத்தை உள்ளகத்திலும், சர்வதேச மட்டத்திலும் உருவாக்க வேண்டும்.

மனித நேயத்தின் அடிப்படையில் இணக்கப்பாட்டுடன் கூடி வாழ, இன்னமும் நாம் நிறையத் தியாகங்களைச் செய்து, கற்றுக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

இத்தகைய அரசியல் முன்னெடுப்புகள் ஊடாக நாட்டில் நல்லிணக்கத்தைத் தோற்றுவிக்க முடியும். சின்னாபின்னப்பட்டு சிதறிப்போயுள்ள இனங்களின் மனங்களை இணைப்பதற்கு, எல்லோரும் மனம் திறந்து பாடுபடல் வேண்டும். அந்நியப்பட்டு நிற்றல் என்பது, எப்போதும் எல்லோருக்கும் இந்த நாட்டில் அபாயத்தின் அறிகுறியாகவே இருக்கும்.

இதில் முக்கிய அம்சமாகக் கொள்ளப்பட வேண்டியது, ‘நாம் அனைவரும் இலங்கையர்’ என்ற அடிப்படையில் இனம், மதம், மொழி பேதங்களுக்கப்பால் எல்லோரும் பாதிக்கப்பட்டவர்கள் என்ற ரீதியில், பொதுவில் எவ்வாறு இணைந்து கொள்ளலாம் என்பதேயாகும்.

# ஆலையடிவேம்பில் கலை விழா



ஆலையடிவேம்பு தமிழ் இலக்கிய பேரவை நடத்திய சித்திரைப் புத்தாண்டு கலை விழாவின் நிகழ்வு ஆலையடிவேம்பு பிரதேச கலாசார மண்டபத்தில் சனிக்கிழமை (30) மாலை நடைபெற்றது.

மட்டக்களப்பு உளவியல் ஆலோசனை மையத்தின் உளவள ஆலோசகரும் தமிழ் இலக்கிய பேரவையின் தலைவருமான க. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற கலை விழாவில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன், முன்னாள் எம்.பி கவீந்திரன் கோடீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் அருளாளராக அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ ப. கேதீஸ்வரக்குருக்களும் சிறப்பு அதிதிகளாக பிரதேச சபை தவிசாளர் த. கிரோஜாதரன், ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி திருமதி அகிலன், அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.அகிலன், தமிழ் இலக்கிய பேரவையின் ஆலோசகர்களான தென் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அனுசியா சேனாதிராஜா, இந்து இளைஞர் மன்ற தலைவர் த.கயிலாயபிள்ளை, கவிஞர் பாவணர், அக்கரைப்பாக்கியன் உள்ளிட்டவர்களும் கௌரவ அதிதிகளாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களான ஏ.எல். தௌபீக், கு. ஜெயராஜ்







உள்ளிட்ட அரச அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், சமய சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், அறநெறி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கலைஞர்கள் எனக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில், கிராமிய நடன நிகழ்வுகளுடன் பரத நாட்டியமும் பலசமூகங்களை பிரதிபலிக்கும் நடன நிகழ்வும் நடைபெற்றன. விசேடமாக கவியரங்கு இடம்பெற்றதுடன் பல்வேறு இலக்கிய போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

அத்தோடு, ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் நீண்டகாலம் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற கலாசார உத்தியோகத்தர் நிசாந்தினி தேவராஜ் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நிறைவாக, தமிழ் இலக்கிய பேரவையின் செயலாளரும் சட்டத்தரணியுமான செல்வி லி. சிந்துஜாவின் நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது.

(படங்களும் தகவலும்: வி. சுகிர்தகுமார்)

# 'தியாகத்தீயில்' நூல் வெளியீடு







விபுலானந்தர் இணையக் கல்விக்கழகத்தின் எற்பாட்டில் மயில் மகாலிங்கம் எழுதிய 'தியாகத்தீயில்' எனும் சிறுகதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா, திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் சனிக்கிழமை (30) மாலை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா கல்வியியல் கல்லூரி உப பீடாதிபதி சதாசிவம் பவானந்தனும் கௌரவ விருந்தினராக முன்னாள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி. தண்டாயுதபாணி, மூதூர் கலாசார உத்தியோகத்தர் க. அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வுக்கு விபுலானந்தா கல்லூரி அதிபர் றெமன்சோதி ஜெறோம் தலைமை தாங்கினார். நூலினை நூலசிரியரின் சகோதரர் ம. உதயகுமார் வெளியிட்டு வைக்க, முதல் பிரதியை நல்லதம்பி துரைராஜா ரகுராம் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து மூத்த இலக்கியவாதிகளான வேலாயுதம் தங்கராசா (தம்பலகாமம்), அம்பலவானர் கௌரி தாசன் (தாமரைதாசன்), பேரம்பலம் கனகரெத்தினம் (ஷெல்லிதாசன் , சோமநாதர் இராசேந்திரம் (தாமரைத்தீவான்), சின்னத்துரை சுந்தரலிங்கம் (திருமலை சுந்தா) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

(படங்களும் தகவலும்: வடமலை ராஜ்குமார்)

# சில்லையூர் மைந்தனின் பொன்விழா

சில்லாலை புனித யாகப்பர் தேவாலயத்தை சேர்ந்த முதலாவது குருவானவரும் திருகோணமலை, மட்டக்களப்பு உட்பட வெளிநாடுகளில் பணியாற்றியவருமான அருட்திரு அருளானந்தம் அடிகளாரது 50 ஆவது குருத்துவ பொன்விழா திருப்பலி, சனிக்கிழமை (30) காலை புனித யாகப்பர் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பங்கு மக்களால் தேவாலய முன்றலில் இருந்து அழைத்துவரப்பட்டு, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத் திருப்பலியில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம்





அடிகளார், தேவாலய பங்குதந்தை அருட்திரு



பாலதாஸ் பிறையன் அடிகளார், பங்குமைந்தர்களான அருட்திரு அமலதாஸ், அருட்திரு நரேஸ், அருட்திரு தேவசகாயம் ஆகிய அருட்தந்தையர்கள் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து பங்குமக்களால் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

(படங்களும் தகவலும்: எஸ். தில்லைநாதன்)

# முத்தையன்கட்டு முத்துவிநாயகர் புரம் மாணவர்கள் கௌரவிப்பு

2021ஆம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த முல்லைத்தீவு முத்துவிநாயகர் தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு, பாடசாலையின் மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை (04) சிறப்புற நடைபெற்றது.

பாடசாலை அதிபர் க. சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுக்கொண்ட நான்கு மாணவர்களுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்த அனைத்து மாணவர்களும் பிரதம விருந்தினர்களால் பதங்கங்களும் கேடயங்களும் நினைவு பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை சாதனை படைப்பதற்கு காரணமாக அமைந்த ஆசிரியர் திருமதி குமுதினியும்பாடசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

இந் நிகழ்வுக்கு பிரமத விருந்தினராக ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி ச. செல்வரத்தினம்,





சிறப்பு விருந்தினராக ஒட்டுசுட்டான் கோட்ட ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி ச. கலைச்செல்வன், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய ஓய்வு பெற்ற அதிபர் க. யோகேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன் முத்துஐயன் கட்டு வலதுகரை மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் வாகீசன், பெற்றோர் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் முத்துஐயன்கட்டு வலதுகரை மகாவித்தியாலய பழைய மாணவனும் தற்போது புலம்பெயர் தேசத்தில் வாழ்ந்து வரும் சுப்பிரமணிம் பிரதீபன் (கமல்) பரிசில்களுக்கும் நிகழ்வு சிறப்புறவும் நிதியுதவியை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தினவிழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் இணைந்து நடத்திய நாவுக்கரசு நாயனார் குருபூசை தின விழா திருக்கோவில், விநாயகபுரம், திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் ஞாயிற்றுக்கிழமை (01) நடைபெற்றது. இந்நிகழ்வு சிவஸ்ரீ நீ. அங்குச நாதகுருக்கள் முன்னிலையில், திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் பணிப்பாளர் கண. இராஜரெத்தினம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார். திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன் உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து சிறப்பித்தார்கள். மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜ் நிகழ்க்கான சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

(படங்களும் தகவலும்: காரைதீவு நிருபர் சகா)







# சாதனையாளர்கள் கௌரவிப்பு

முல்லைத்தீவு மாவவட்டத்தின் வித்தியானந்த கல்லூரியின் சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்கும் இடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான திறந்த முறையிலான மல்யுத்த போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட ஆண், பெண் இரு அணிகளும் மாகாணத்தில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டன.

இவ்வாறு முல்லை மாவட்ட அணி, மாகாணத்தில் முதலிடங்களை பெறுவதற்கு பெரும் பங்களிப்பை வழங்கிய முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மாணவ, மாணவிகளான



வீர, வீராங்கனைகளுக்கு பாடசாலையின் அதிபரால், பாடசாலை சமூகம் சார்பாக அனைத்து மாணவர்கள் முன்னிலையில் பாராட்டி கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது.

மு/வித்தியானந்த கல்லூரி மாணவர்களான முதலாம் இடத்தை பெற்றுக் கொண்ட ம. பிரிந்தன், இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட சி. கயனன், மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்அ. டிலிக்சன், ஆகியோரும் பெண்கள் அணியில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்ட சி. கயானா, இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட வி. ஜனோஜினி ஆகிய வீர வீராங்கனைகள் இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், மல்யுத்த பயிற்றுவிப்பாளர் பி. ஜெயதர்சன், மாவட்ட விளையாட்டு பயிற்றுநர் ஆர். சகிதரசீலன் ஆகியோரும் மதிப்பளிக்கப்பட்டனர்.

(படங்களும் தகவலும்: யது பாஸ்கரன்)

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் சனிக்கிழமை, 07 மே 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.